# சிவப்பு விமானம்


யோ. சத்யன்



யோ. சத்யன்

# சிவப்பு விமானம்

## சிறுவர்களுக்கான கதைகள்



JAFFNA SOCIAL ACTION CENTER
159, 4th. CROSS STREET
JAFFNA
Tel: 021 222 3699
JSAC

சிவப்பு விமானம்
குழந்தை இலக்கியம்
டாக்டர். யோ. சத்யன்
முதற்பதிப்பு - 2002
கணினி வடிவமைப்பு,
அச்சுப்பதிப்பு : Quick Tec Academy
385 - 2/9, Galle Road,
Colombo - 06.
T.P : 504311
உரிமைபதிவு : டாக்டர். யோ. சத்யன்
வெளியீடு : அட்மிரல் பப்ளிஷர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
403 - 1/1, காலி வீதி,
கொழும்பு - 06.
T.P : 362766

விலை : ரூபா 120 /=

SIVAPPU VIMANAM
CHILDRENS LITERATURE
DR. Y. SATHYAN
FIRST EDITION - 2002
TYPE SETTING &
PRINTING : Quick Tec Academy
385 - 2/9, Galle Road,
Colombo - 06.
T.P : 504311
COPYRIGHT RESERVED : DR. Y. SATHYAN
PUBLISHED BY : Admiral Publishers (Pvt) Ltd.
403 - 1/1, Galle Road,
Colombo - 06.
T.P : 362766

PRICE : Rs. 120 /=

## உங்களோடு சில வார்த்தைகள்

''சிவப்பு விமானம்'' என்ற இந்தச்சிறுகதைத்தொகுப்பில் வரும் கதைகளினூடாக எனது அன்புக்குரிய தம்பி தங்கைகளின் கைகள் பற்றி மீண்டுமொருமுறை அவர்களுடன் உலாவருவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். சிறுவர்களது மனம் அற்புதமானது. தெட்டத்தெளிவானது. வேடிக்கையும் விநோதமும், கற்பனையும் நிறையப்பெற்றது. அத்துடன் நில்லாது அற்புதமானதொரு ஆற்றலையும் கொண்டது. தன்னுள் வந்து விழும் தகவல்களையும், சம்பவங்களையும் தப்பாது சேகரித்து வைத்துக்கொள்ளுவதே அவர்களது மனதின் அற்புத ஆற்றலாகும். அவ்வாறாக சிறுபிராயங்களில் சேகரித்துப்பதித்து வைக்கப்படும் சம்பவங்களும், தகவல்களும் முதிய பிராயத்தையும் கடந்து இறுதிமூச்சுவரை நினைவில் நிற்கும் வல்லமை கொண்டவை.

பிஞ்சுப்பருவத்து நினைவுகளின் வலிமையை எடைபோடுவதற்கு ஏற்றதாக நல்லதொரு உதாரணத்தையும் நான் இங்கு சொல்ல விரும்புகிறேன். நோயாளர்களின் உடலைப்பரிசோதிப்பதோடு மட்டும் நின்றுவிடுவதால் அவர்களுக்கு ஏற்பட்ட உடற்கோளாற்றினைப்பற்றி இறுதியானதொரு முடிவுக்கு வந்துவிடமுடியாது. மருத்துவபரிசோதனைகளுக்கு முன்பாக அவர்களுடன் பேசி அவர்களது சமூகப்பின்னணி, சிறுபிராயச்சம்பவங்கள், இளவயதில்

என்ன விதமான நோய்களால் பாதிக்கப்பட்டார்கள் என்பன போன்ற பல விடயங்களைக்கேட்டறிந்து பதிவு செய்து கொள்வது இந்த இறுதியாண்டு மருத்துவப்படிப்பிலே எமது அன்றாடப்பணியாகும்.

அவ்வாறாக வயதுமுதிர்ந்த பலரோடு பேசித்தகவல்களை சேகரிக்கும்போது அதிசயிக்கத்தக்கதொரு உண்மையையும் கண்டுகொண்டேன். ஏறத்தாழ அவர்களில் அனைவருக்குமே அறுபது, எழுபது வருடங்களின் முன்னர் தங்களது சின்னஞ்சிறிய வயதுகளில் நடந்த சம்பவங்களும், பீடித்த நோய்களும் நேற்று நடந்தவைபோல நினைவிலிருந்தன. நோயின் கொடுமையையும் மறந்து மகிழ்ச்சியோடு அந்த நினைவுகளை விபரித்திருப்பார்கள். ஆனால் பாவம் அவர்களால் ஒருவாரத்துக்கு முன்னர் நடந்த சம்பவங்களை நினைவுக்குக்கொண்டுவர முடிவதில்லையே!.

சில நாட்களுக்கு முன்பாக உளவியல் விளக்கத்தைக்கேட்டேன். உடல் இயக்கவியலில் (Physiology) நிலவிவரும் தனியானதொரு விதியை ஆதாரமாகக்கொண்ட அந்த உண்மையை உளவியல் பேராசிரியர் எங்களுக்கு விளக்கிச்சொன்னார். இடைக்கால வயதுகளில் குடும்பச்சூழ்நிலைகளும், சமூகப்பிரச்சனைகள் மற்றும் பொருளாதார நிலைகளும் பலகோணங்களிலிருந்தும் கொடுக்கும் தாக்கங்களில் மனித மனம் தனது முழுக்கவனத்தையும்

செலுத்துவதால் தன்னைச்சுற்றிலும் நடந்துவரும் பல்வேறான நிகழ்ச்சிகளை அவதானிப்பதிலும் செய்திகளை ஏற்று மூளையில் பதிப்பதிலும் உள்ள ஈடுபாட்டைப் படிப்படியாக இழந்துவிடுகிறது. முதுமைப்பிராயத்தை எட்டும் போது உடல் இழையங்களும் அணுக்களும் அவற்றுடன் கூடவே மனமும் முதுமையடைந்து விடுகிறது. உடல் தனது பலத்தை இழந்து, நோய்களை இலகுவாக வரவேற்கிறது. நோயின் தாக்கங்களும் பலவீனமும் அவதானிக்கும் ஆற்றலையும், கிரகிக்கும் திறனையும் குறைத்துவிடுவதால், சம்பவங்களும், தகவல்களும் மூளையில் பதிக்கப்படுவதும் பெருமளவில் குறைந்துவிடுகிறது. அதனால் மனதில் இப்போது நிறைந்துள்ள இடைவெளியை மூளையில் ஆழமாகப்பதிந்துள்ள இளவயது நினைவுகளும், சம்பவங்களும் தாராளமாய் நிரப்பிவிடுகின்றன. இதிலிருந்து மனிதர்களது வாழ்க்கையின் மூன்று முக்கியமான பிராயங்களாகிய இளவயது, நடுநிலை வயது, முதிய வயது ஆகியவற்றில் இளம்பிராயத்தின் முக்கியத்துவம் பற்றி நன்றாக அறிந்துகொள்ளமுடிகிறதல்லவா!.

குழந்தை மனதுகளின் சக்தியை நினைவில் கொள்ளாத, வியாபாரநோக்கத்தை மட்டுமே கருத்தில் கொண்ட சில மனிதர்களது செயல்களால் குழந்தை இலக்கியம் நகைப்புக்குரியதொரு விடயமாகிப்போய்விட்டது போலுள்ளது!. நெருப்பில் குதித்து, மூழ்கி, அதிலிருந்து மீண்டும் எழுந்துவரும்

வெள்ளைக்காரக்கதாநாயகர்களும், அவர்களின் பயங்கரமான ஆயுதங்களுக்குப் பலியாகிடும் இராட்சதர்களும் தமிழ்க்குழந்தைகள் இலக்கியம் என்ற பூங்காவினுள்ளே தங்குதடையின்றிப்புகுந்து நின்று கொண்டு சதிராடுகிறார்கள்.

''குறுகியதொரு வட்டத்துக்குள் நின்றுகொண்டு பேசுகிறாய் நீ'' என்று பலர் சொல்லலாம். கிணற்றுத்தவளைபோல வாழக்கூடாது என்று புத்திமதிகூட சிலர் சொல்லலாம். அப்படியானதொரு மனநிலையோடு நான் இதை எழுதவில்லை. உலகத்து மொழிகளில் குழந்தைகளுக்காகப் பல்லாயிரக்கணக்கான புத்தகங்கள் வெளியாகின்றன. அவற்றில் எவ்வளவோ நல்ல புத்தகங்கள் அறிவையும், அன்பையும் நல்ல பண்பையும் சொல்லிடும் ஆற்றல் கொண்டவையாக இருக்கும்போது, அவற்றையெல்லாம் தமிழ்மொழியில் எடுத்து வந்து எமது சிறுவர்களுக்குக் கொடுத்திடாது ஏன் இவ்வாறான கொடூரகுணம் கொண்ட கதாநாயகர்களையும், பயங்கரமான உருவங்களையும், வன்முறைகளையும் தாங்கிய புத்தகங்களை வேற்று மொழியிலிருந்து ஏற்றுத் தமிழ்மொழியில் தந்திடவேண்டும்? அதற்கு ஒரேயொரு காரணம் அவை நன்கு விற்றுப்போகும், பை நிறயப் பணத்தைத்தேடித்தரும் என்பதுதான். தனது சொந்த இனத்தினதும், மொழியினதும் தரத்தைக்கெடுத்து அதனால் சேர்த்திடும் பணத்தினால் என்ன பயன் என்பதை அவ்வாறான சிலர் உணரவில்லையே.

நான் சிறுவனாயிருந்த காலங்களில் எனது அப்பாவும் அம்மாவும் வாங்கிக்கொடுத்த புத்தகங்களைப் படித்துவிட்டு, மனம் இலேசாகிப்போனதை உணருவேன். கெட்ட செயல்களையெல்லாம் இனிமேல் செய்யக்கூடாது!. இந்தக்கதையில் வரும் சிறுவனைப்போலவே நானும் அன்பானவனாக, பெற்றோர்கள், ஆசிரியர்களுக்குப் பணிவாளனாக நடந்திடவேண்டும், சுத்தமாயும், சுறுசுறுப்பாயும் இருந்திடவேண்டும் என்று நினைப்பேன். செயலிலும் காட்டுவேன். பூனைக்குட்டியொன்றையும், நாய்க்குட்டி ஒன்றையும் வாங்கிவளர்த்திட ஆசைகொள்வேன். பூனைக்குட்டியையும், நாய்க்குட்டி ஒன்றையும் வளர்த்தேன். அவைமேல் அன்புகொண்டேன். இன்று என்னருகே உயிரோடு இல்லாதபோதிலும், அந்த மென்மையான நண்பர்களைப்பற்றிய நினைவுகளுக்கு எனது கதைகளின் மூலமாக உயிர்கொடுத்து உங்களுக்கும் அறிமுகம் செய்து அவர்களை உங்களோடு பேசவும் செய்கிறேன். நான் மட்டுமல்ல எனது பள்ளி நண்பர்களில் பலரும் என் புத்தகங்களையும், அதிலிருந்த கதைகளையும், அந்தக்கதைகளின் நாயகர்களையும் பகிர்ந்து படித்துப்பேசி நட்புக்கொண்டு மகிழ்ந்திருந்தோம். எனது பாடசாலை நாட்களின் இடைக்கால மற்றும் இறுதிக்காலச்சம்பவங்களையும், நினைவுகளையும் விட ஆரம்பகாலங்களில் நடந்த நிகழ்வுகளும், நினைவுகளுமே என் மனதில் பசுமையாய்ப் பதிந்திருக்கின்றன.

சிறுவர்களின் பிஞ்சுமனதுகளின் அற்புத ஆற்றல்களைப்பற்றி அறிந்துகொள்வதற்கு இவ்வாறான ஒருசில உதாரணங்களே போதுமல்லவா!. ஆகவே சமூகம் என்றதொரு விளைநிலத்தின் புதுப்பயிர்களாகிய குழந்தைகளின் ஆரோக்கியமான மனவளர்ச்சிக்கு மென்மையும் இனிமையும் தரும் சொற்களும், பொம்மைகளும் புத்தகங்களும் மிகமிக அவசியமாகும். மலர் இதழ்களைப்போன்ற மென்மையான அந்தக்குழந்தைகளின் உள்ளங்களைக் குத்திப் பதம் பார்க்க முயலும் விஷமுட்களாம் அந்த மேலைநாட்டு அதிவீரர்களையெல்லாம் விரட்டியடித்திடவேண்டும். வீரத்தையும், நல்ல பண்புகளையும் சொல்லிட அவர்களும் அவர்களது கலாச்சாரங்களும் இங்கு எமக்குத்தேவையில்லை. எமது வரலாறுகளே இனி நீளும் காலங்களிலெல்லாம் எமக்குப்போதுமானது. வீரத்தையும், தியாகத்தையும், அறிவையும், நல்லபண்புகளையும் உதாரணம் காட்டுவதற்கு!.

தமிழ்க்குழந்தைகள் நல்ல புத்தகங்களைப் படித்திடவேண்டும். அன்பும், மென்மையும் பண்பும் கொண்ட நல்ல நாயகர்களுடன் நட்புக்கொள்ளவேண்டும். சூனியக்காரிகளும், குள்ளநரிகளும், சிலந்தி மனிதர்களும் அவர்களுக்குத் தேவையில்லை. பண்பு சொல்லும். சாதாரண மனித நாயகர்களும், அன்புகாட்டிடபதிலுக்கு அன்புசொல்லும் நன்றியுள்ளம் கொண்ட பிராணிகளும், கலைகளும், விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் அவர்களுக்குப்போதும்.

மாஞ்சோலைகளிலும், பூந்தோட்டங்களிலும் எங்கள் சிறுவர்கள் துள்ளிக்குதித்து பயமின்றி ஓடிவிளையாடி மகிழ்ந்திடவேண்டும். பொம்மை விமானங்களில் மனதைப்பறிகொடுத்து நாளை உண்மை விமானங்கள் பலவற்றைக்கட்டி அவற்றிலே ஏறிப்பறந்து மகிழவேண்டும். நேற்றிலிருந்து அழிந்து நாளை மீண்டும் எழப்போகும் நூலகம் சென்று அது கண்டு பெருமையும், மகிழ்வும் கொள்ளவேண்டும்.

கலையையும், கலாச்சாரத்தையும், பண்பையும் எமக்கு எவரும் சொல்லித்தரவேண்டாம்! நாங்கள் சொல்லித்தருவோம் என்று சொல்லி இறுமாப்புடன் நிற்கவேண்டும். காலத்தின் போக்கிலே போலி முகங்கள் என்றுமே நிலைத்து நிற்கப்போவதில்லை. ஆனால் அச்சில் பதிந்து உலாவும் பண்பான நாயகர்களும் அன்பான செல்லப்பிராணிகளும் என்றென்றும் அவர்களின் மனதுகளில் நிலைத்துநிற்பார்கள்.

யோ. சத்யன





உப்புக்குவியலினுள்ளிருந்து
நான் கண்டெடுத்த
மாணிக்கமாம் நண்பன்
செந்தில்குமாருக்கு அன்புடன்
இந்தப்புத்தகம்.




# இந்தப்புத்தகத்தினுள்ளே......


1. குட்டிநாயாரின் குறும்புத்தனம)
2. சிவப்பு விமானம்
3. அன்னை
4. பள்ளிக்குச் சென்றேன்
5. ஒரேயோரு மாம்பழம்
6. சிவப்புநிறச் சிங்காரக்குடை
7. அன்புமனம்




# குட்டிநாயரின் குறும்புத்தனம்

குட்டிச்சிறுவன் வாசுவிடம் அற்புதமான பொம்மைகள் பல இருந்தன. அவற்றைப்போலவே வண்ணப்படங்கள் கொண்ட கதைப்புத்தகங்களும் நிறைந்திருந்தன. அவனுக்கென்று பெற்றோர்கள் ஒதுக்கிக்கொடுத்த அறையிலே பொம்மைகளும், புத்தகங்களும் மலைபோல் குவிந்திருந்தன. பள்ளிமுடிந்து வந்து வேகவேகமாய் வீட்டுப்பாடங்களை எழுதிமுடித்திடும் வாசு தினமும் மாலைவேளைகளில் சிலமணிநேரங்களையாவது தனது பொம்மை நண்பர்களுடன் சேர்ந்து கழித்திட ஒதுக்கிக்கொள்வான்.



முன்பெல்லாம் தனது பொம்மைகள் சிலவற்றை எடுத்துச்சென்று தோட்டத்து மாமரத்தின் நிழலிலே புற்தரையில் வைத்து விளையாடுவது வழக்கம். ஆனால் அன்றொருநாள் நடந்த சம்பவமொன்றின் பிறகு தனது அருமையான பொம்மைகளில் எதையுமே அவன் தோட்டத்துப்புற்தரைக்கு எடுத்துச்சென்று வைத்து விளையாடுவதில்லை. அன்று நடந்த அந்த அதிர்ச்சிகரமான சம்பவத்தின் நாயகன் வேறு யாருமில்லை. வாசுவின் வீட்டிலே வளர்ந்துவரும் குறும்புத்தனம் நிறைந்த குட்டிநாயாரே அவர். தோட்டத்திலே அமர்ந்து விளையாடிக்கொண்டிருந்த வாசுவைப்பார்த்த குட்டிநாயாருக்கு


தனது கழுத்தைச்சுற்றிக் கட்டப்பட்டிருந்த தோல்பட்டியின் மீது பொல்லாத கோபம் பிறந்தது. அந்தப்பட்டியுடன் சேர்த்து இணைக்கப்பட்டிருந்த கயிற்றால் வாசுவின் தாயார் அவரைக்கட்டிவைத்திருந்தார். வாசு வைத்து விளையாடிய பொம்மைகளில் குட்டிநாயாரை மிகவும் கவர்ந்தது அந்தப்பஞ்சுக்கரடி பொம்மை. உற்ற நண்பனான தன்னைவிட்டுவிட்டுப் பஞ்சுக்கரடி பொம்மையுடன் ஆனந்தமாய் விளையாடி மகிழ்ந்திடும் வாசுவின் மேல் அவருக்கு ஏற்பட்ட கோபம் நியாயமானதுதானே. உர், உர்ரென்று ஆரம்பத்திலும், வள், வள்ளென்று சிறிது நேரத்திலும் கத்திக்குலைத்து எத்தனை ஆர்ப்பாட்டம் செய்த போதிலும் அவரை வாசு கண்டு கொள்வதாகவேயில்லை.



அதனால் இப்போது குட்டிநாயாரின் கோபம் முன்னிருந்ததைவிடப் பன்மடங்காய் அதிகரித்தது. கழுத்தில் கட்டப்பட்டிருந்த பட்டியுடன் சேர்த்துக்கயிற்றைப் பலமாக இழுத்து இழுத்துப்பார்த்தார், கழுத்து வலித்ததுதான் மிச்சம். பற்களால் கயிற்றைக் கடித்துக்கடித்துப் பார்த்தார். பல் வலி, கண்டதுதான் பலன். ஆவேசப்பட்டுத் துள்ளிக்குதிப்பதில் பலன் ஏதுமில்லை என்பதை உணர்ந்துகொண்ட குட்டிநாயார் அமைதியாகத்தரையில் அமர்ந்தார். முன்னங்கால்களில் கயிற்றின் ஒரு பகுதியைப்பற்றிக்கொண்டு பற்களால்

அதைக்கடித்து மெதுமெதுவாக அறுக்கத்தொடங்கினார். குட்டிநாயாரின் கூர்மையான பற்களிலே மாட்டிக்கொண்ட கயிறு சிறிதுசிறிதாக அறுந்தது.

புற்தரையிலே பஞ்சுக்கரடி பொம்மையை வைத்துவிட்டு, மாமரத்திலே சாய்ந்து, கண்களைமூடி ஏதோ சிந்தித்திருந்தான் வாசு. பின்னர் வேகமாக எழுந்து அங்கிருந்து விரைந்தோடி வீட்டுக்குள் நுழைந்தான். வாசு ஓடுவதைக்கண்ட குட்டிநாயார், கயிற்றால் தன்னைக்கட்டி வைத்திருப்பதையும் மறந்து துள்ளிக்குதித்துத் தானும் வாசுவின் பின்னால் ஓடமுயன்றார். குட்டிநாயார் இழுத்தவேகத்தில், ஏற்கனவே அவரது பல்லுப்பட்டு பாதி அறுந்து பலவீனமாயிருந்த கயிறு பட்டென்று அறுந்தது.



கட்டிலிருந்தும் தப்பித்துக்கொண்ட குட்டிநாயார் வில்லினின்றும் விடுபட்ட அம்புபோல பாய்ந்து ஓடியவர் இப்போது ஒரே பாய்ச்சலில் பாய்ந்தோடிவந்து பஞ்சுக்கரடிப்பொம்மையை வாயில் கௌவி எடுத்துக்கொண்டார். குட்டிநாயாரின் வாயில் மாட்டிக்கொண்ட பஞ்சுக்கரடிப்பொம்மையின் நிலையைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா என்ன? ரோஜாச்செடிகளைச்சுற்றி அம்மா அமைத்திருந்த பாத்திகளின் ஈரமான சேற்றுமண்ணிலும், புற்தரையிலும் பஞ்சுக்கரடிப் பொம்மையைப்போட்டு உருட்டி எடுத்தார். ஈரமான சேற்று

மண்ணிலும், புழுதியிலும் தோய்ந்து பஞ்சுக்கரடிப்பொம்மை பரிதாபமாகக்காட்சிகொடுத்தது.

வாயில் கௌவிவைத்திருந்த பொம்மையைத்தரையில் போட்ட குட்டிநாயார், அதைச்சுற்றிச்சுற்றி ஓடிவந்து வள் வள்ளென்று குலைத்துத்தன்னுடன் விளையாட்டுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். தனது அழைப்பையும் மதித்திடாது மௌனமாயிருக்கும் கரடிப்பொம்மை மேல் கடுங்கோபம் கொண்ட குட்டிநாயார் அதை மீண்டும் வாயில் கௌவி எடுத்துக்கொண்டு, தோட்டத்தைச் சுற்றிவட்டமிட்டு ஓடினார்.



வீட்டுக்குள் சென்று, கதைப்புத்தகமொன்றை எடுத்துக்கொண்டு, மீண்டும் மாமரத்தடிக்கு வந்த வாசுவின் உள்ளம் அதிர்ச்சியால் நடுங்கியது. மரத்தடியிலே வைத்திருந்த பஞ்சுக்கரடிபொம்மையைக் காணாததும், சேற்றிலே தோய்ந்ததொரு விந்தையான பொருளை வாயில் கௌவிக்கொண்டே, தோட்டத்தைச்சுற்றித் துள்ளிக்குதித்தோடும் குட்டிநாயாரைக்கண்டதும் நடந்து முடிந்தவற்றையெல்லாம் ஒரு கணத்தில் அவன் ஊகித்துக்கொண்டான். தரையில் கிடந்ததொரு குச்சியைக்கையில் எடுத்துக்கொண்டு, குட்டிநாயாரை நோக்கி விரைந்தோடினான்.

கையில் குச்சியுடன் தன்னை நோக்கிப் பாய்ந்தோடிவரும் வாசுவைக்கண்ட குட்டிநாயார் திகில்

மிகக்கொண்டார். அதற்குமேலும் கரடிப்பொம்மையுடன் அங்கு நின்றிருக்க அவர் முட்டாளா என்ன! வாயிலிருந்த கரடிப்பொம்மையைத் தரையில் போட்டவர், வாலைத்தொங்கப்போட்டுக்கொண்டே, மூச்சிரைக்க ஓடி, தோட்டத்தின் ஒரு மூலையிலே அடுக்கிவைக்கப்பட்டிருந்த விறகு கட்டைகளின் இடுக்குகளில் ஒன்றினுள் புகுந்துகொண்டு தப்பித்தார்.



தரையில் கிடந்த பஞ்சுக்கரடிப்பொம்மையை எடுத்துப்பார்த்த வாசுவின் கண்களில் கண்ணீர் அருவியாய்ப்பெருகியது. குட்டிநாயாரின் பொல்லாத பற்களில் மாட்டி ஆங்காங்கு கிழிந்தும், கறுப்புவண்ண மணிகளால் அமைக்கப்பட்டிருந்த அருமையான கண்களை இழந்தும் பரிதாபமாகக்காட்சி கொடுத்தது கரடிப்பொம்மை. பொம்மையையும் எடுத்துக்கொண்டு, சமயலறையில் வேலையாயிருந்த தாயாரிடம் விரைந்து ஓடினான் வாசு. அம்மாவிடம் தனது கரடிப்பொம்மையைக் காட்டிவிட்டு, ஏதும் பேசாது அவரது கால்களைக் கட்டிக்கொண்டான். வாசுவின் கண்களிலிருந்தும் பெருகிய கண்ணீர்த்துளிகள், கரடிப்பொம்மையின்மேல் விழுந்து சிதறின. அருமை மகனின் அழுகையை நிறுத்தி ஆறுதல்சொன்ன அம்மா, நடந்ததைக்கேட்டு அறிந்துகொண்டார்.


''கவலைப்படாதேயப்பா இப்போதே கடைத்தெருவுக்குச் சென்று இதே போலவே ஒரு பொம்மையை வாங்கி வந்திடுவோம்'' என்று அன்பாகச்சொல்லி, வாசுவைத் தேற்றினார். கண்களில் தேங்கியிருந்த கண்ணீரை ஒருகையால் துடைத்துக்கொண்டு, மறுகையில் கரடிப்பொம்மையையும் எடுத்துக்கொண்டான். மறுபடியும் தோட்டத்துக்கு வந்து அங்கு எங்காவது குட்டிநாயார் தரிசனம் கொடுக்கிறாரா என்று நோட்டமிட்டான் வாசு. குட்டிநாயாரை எங்குமே காணவில்லை. இன்னும் சில மணிநேரங்களுக்காவது எவர் கண்களிலுமே படாத மாயமனிதராகவல்லவா குட்டிநாயார் மாறிவிடுவார்.

''தம்பி விரைந்திங்கு வந்து முகம் கழுவு, கடைகளை மூடிவிடுவார்கள்'' என்று அம்மா கிணற்றடியிலிருந்து குரல் எழுப்பினார். அம்மாவின் குரல் கேட்டு வீட்டுக்குள்ளே விரைந்தோடினான் வாசு. கட்டை இடுக்குகளின் மத்தியிலே ஏக்கம் நிறைந்த ஒருசோடிக்கண்கள் தோட்டத்தையும், வீட்டையும் மாறிமாறிப்பார்த்தன.



# சிவப்பு விமானம்

மார்கழி மாத விடுமுறை காலம். வாசுவுக்கு மார்கழி மாதம் என்றாலே மிகவும் பிடித்தமானது. பள்ளிகள் விடுமுறைக்காக மூடப்பட்டிருக்கும். அதைவிட அந்தமாதத்தின் காலநிலை மிகவும் இனிமையானது. மழைத்தூறலும், மெல்லிய பனியில் நனைந்த பூ இதழ்களும் அம்மா தயாரித்துத்தரும் சூடான பால்த்தேனீரும் என்றுமே இனிமையானவை. ஆனாலும் ஒரேயொரு விடயம் மட்டும் வாசுவுக்குப்பிடிக்காதது. வீட்டிலிருந்து சிறிது தொலைவிலிருக்கும் ஒரு வாய்க்கால், நீரால் நிரம்பப்பெற்று, தவளையார்களின் கானக்கச்சேரிக்கு ஏற்ற மேடையாகவும், நுளம்பர்களின் இனிய இல்லமாகவும் விளங்கிடும் காலமும் இந்த மார்கழி மாதமே.



தீர்க்கதரிசனமற்ற நமது முன்னோர்கள் சிலரது சிந்தனையில் பிறந்த திட்டங்களில் ஒன்றுதான் அந்த வாய்க்கால்

போலும். பாதையோரமாய் அமைந்திருக்கும் வாய்க்காலில் நீர் நிரம்பித் தளதளத்துப் பாதை எங்கே, வாய்க்கால் எங்கே என்று தெரியாது பரவியிருக்கும். பள்ளிமுடிந்து வீடுதிரும்பும் வாசுவுக்கு அந்தப்பாதையைக்கடப்பது ஏதோ பெரியதொரு கண்டத்தையே கடப்பது போலதொரு உணர்வைக் கொடுத்திடும்.

ஆயினும் அந்தப்பாதையின் ஓரமாய் அமைந்திருந்த வீடுகளில் ஒன்றிலிருந்து எழும் இடியப்பவாசனையும், கூடவே சம்பலின் இனிய மணமும் வாய்க்காலின் பயங்கரத்தைப் பொடிபொடியாக்கிடும். அந்த வீட்டில் வசித்த குண்டுத்தேகம் கொண்ட பாட்டியார் இடியப்பம் அவித்து விற்றுவந்தார். முன்பு வாசுவின் அம்மாவும் குண்டுப்பாட்டியாரின் வாடிக்கையாளராய் இருந்ததால் அந்த இடியப்பங்களையும் கூடவே உறைப்பான சுவைமிகுந்த சம்பலையும் சுவைத்திடும் வாய்ப்பு வாசுவுக்குக் கிடைத்தது.

இடியப்பம் அவிக்கும் கலையை இப்போது அம்மா நன்கு கற்றுத்தெரிந்ததால் குண்டுப்பாட்டியாரிடம் வாங்கும் தேவையும் இல்லாது போயிற்று.

மார்கழி மாதத்தின் இனிமைகளைச் சொல்ல ஆரம்பித்து இடைநடுவில் அந்தப் பாழாயாப்போன வாய்க்காலைப் புகுத்தியதற்கு அன்புக்குரிய குட்டி நண்பர்களே என்னை மன்னித்திடுங்கள். எனினும் சுவைமிகுந்த இடியப்பங்கள் பற்றிச்சொல்லியதால் வாய்க்காலின் கொடூரம் உங்களுக்கும் பெரிதாகத் தோன்றாது என்றே நினைக்கிறேன். வாருங்கள் நாங்கள் எடுத்துக்கொண்ட விடயத்துக்கே மீண்டு செல்லலாம்.

அத்துடன் அந்த வாய்க்காலைப்பற்றியும் இப்போது நாம் பெரிதாகச் சிந்திக்கத்தேவையில்லை. ஏனெனில் அங்கு சூழ்ந்திருக்கும் அபாயம் கருதி வாசுவின் தாயார் அந்தப்பாதையை விலக்கி, வேறொரு பாதை வழியாகப் போய்வருமாறு சொல்லியிருந்தார். அதைவிட அந்தப்பாதையோரத்தில் விஷம்கொண்ட பாம்புகள் சிலவும் வசித்து வந்தன. அவற்றுக்கு அந்த வழியாகப் போய்வருவோரை சீண்டிப்பார்த்திடும் வேலையைத்தவிர வேறெதுவுமில்லை. துஷ்டரைக்கண்டால் தூரவிலகுவது நலமல்லவா!.



போர்வையை இழுத்துத் தலைவரை மூடித்தூங்கியிருந்தான் வாசு. பனிப்போர்வையை சிறிது விலக்கி எட்டிப்பார்த்த காலைச்சூரியனின் இளஞ்சூடான கதிர்கள் வாசுவின் முகத்தை மென்மையாகத் தாக்கின. இலேசாகக் கலைந்திட்ட தூக்கத்தை, ''வாசு இங்கே வந்து பார்'', என்ற அம்மாவின் குரல் முழுதுமாகக் கலைத்தது. சோம்பல் முறிந்து போர்வையை விலக்கிப் படுக்கையிலிருந்தும் எழுந்த வாசு யன்னல் வழியே எட்டிப்பார்த்தான்.

முற்றத்திலே நின்றிருந்த அம்மாவின் கைகளில் பெரியதொரு அட்டைப்பெட்டி காட்சியளித்தது. துள்ளிக்குதித்து ஓடிய வாசு அம்மாவின் அருகே சென்று என்னம்மா இது என்று ஆர்வம் பொங்கிடக் கேட்டான். நீயே பார் என்று சிரித்துக்கொண்டே சொல்லிய தாயார் அட்டைப்பெட்டியை வாசுவிடம் கொடுத்தார். அட்டைப்பெட்டியிலே வாசுவின் பெயர் முத்தான கையெழுத்தால் எழுதப்பட்டிருந்தது.

வாசுவுக்கு சந்தோஷம் தாங்கமுடியவில்லை. இந்தப்பார்சலுக்காகத்தான் வெகுநாட்களாக அவன் காத்திருந்தான். வெளிநாட்டில் வசித்துவந்த வாசுவின் மாமனார் பரிசுப்பொருள் ஒன்றை அவனுக்காக அனுப்பியிருப்பதாக முன்னர் கடிதத்தில் எழுதியிருந்தார். ஆனால் என்ன பொருள் என்பதை மட்டும் அவர் எழுதியிருக்கவில்லை. துள்ளிக்குதித்த வாசு, தாயாரை இறுகக்கட்டிக்கொண்டு அவர் கன்னத்தில் முத்தமிட்டான். சரி, சரி போதுமடா என்று சொல்லிய அம்மா, வா உள்ளே போய்ப் பெட்டியைப் பிரித்துப்பார்க்கலாம் என்று சொல்லி, தோட்டவேலையையும் பாதியில் விட்டுவிட்டு வாசுவுடன் கூடத்துக்கு வந்து சேர்ந்தார்.

அம்மாவும் மகனும் அட்டைப்பெட்டியைச்சுற்றி மூடி ஒட்டப்பட்டிருந்த கடதாசியை வெட்டி அகற்றி பார்சலை மெதுவாகத் திறந்தார்கள். பார்சலினுள்ளே ஒரு காகிதத்தாள் மடித்துவைக்கப்பட்டிருந்தது. அம்மா அதை எடுத்துப் பிரித்துப்பார்க்க, வாசு பார்சலினுள்ளிருந்த அந்த அழகான அட்டைப் பெட்டியைக்கைகளில் எடுத்துக்கொண்டான். அட்டைப்பெட்டியிலே அற்புதமானதொரு சிவப்புநிற விமானத்தின் படம் வரையப்பட்டிருந்தது. கையிலிருந்த பெட்டியை மெதுவாகக் குலுக்கிப்பார்த்தான். கலகலவென ஏதோ பொருட்கள் குலுங்கும் சத்தம் கேட்டது.

அட்டைப்பெட்டியிலே ''மின்சார பொம்மை விமானம்'' என்று, ஆங்கில எழுத்துக்களால் எழுதப்பட்டிருந்தது. அதற்குள் காகிதத்தைப்படித்து முடித்த அம்மா, சிரித்தபடியே அதை வாசுவிடம் கொடுத்தார். உரத்துப்படி பார்க்கலாம் என்று அன்புடன் சொல்லியவர், பொம்மை விமானம் இருந்த அட்டைப்பெட்டியை வாசுவிடமிருந்து வாங்கிப்பார்த்தார்.



கடிதத்தை வாசு உரத்துப்படித்தான். அதில் ''அன்புள்ள வாசு உனக்கு எனது அன்புப்பரிசு. இந்த கடிதத்திற்கு நிச்சயமாக எனக்குப் பதில் எழுதவேண்டும். மேலும் பல பொம்மைகளை உனக்கு அனுப்பி வைப்பேன். அம்மா மற்றும் அனைவருக்கும் எனது அன்பு உரிதாகட்டும். அன்பு மாமா''.

கடிதத்தைப் படித்துமுடித்த வாசு அதைப்பக்குவமாக மடித்து அம்மாவிடம் கொடுத்தான். மகனது முகத்தில் நிறைந்திருந்த மகிழ்ச்சி கண்டு தாயாரது மனதும் பூரிப்பால் நிறைந்தது. எங்கே, அட்டைப்பெட்டியைத் திறந்து உனது பொம்மை விமானத்தை எடுத்திடு பார்க்கலாம் என்று வாசுவை அவசரப்படுத்தினார் அம்மா. தனது அருமைத்தம்பியாரின் பரிசுப்பொருளைப் பார்ப்பதில் அவருக்கும் ஆர்வம் அதிகமாயிருந்தது.

அட்டைப்பெட்டியைப் பிரித்த வாசுவின் கண்கள் ஆச்சரியத்தால் அகலவிரிந்தன. பெட்டியினுள் பளபளவென மினுங்கும் சிவப்புநிற விமானம் காட்சிகொடுத்தது. மெதுவாக அந்த விமானத்தைக் கைகளில் எடுத்துப்பார்த்தான். ஒரு சோடி இறப்பர்ச்சில்லுகளும், மூக்கில் பொருத்தப்பட்டிருந்த காற்றாடியும், மெத்தென்ற இருக்கையும் சிறுவன் வாசுவின் மனதில் சொல்லிடமுடியாத அளவுக்கு ஆனந்தத்தைத் தோற்றுவித்தன. உண்மையானதொரு விமானத்தையே அச்சில் வார்த்து வைத்தது போலிருந்தது அந்த பொம்மை விமானம்.

விமானத்தைத்தவிர அட்டைப்பெட்டியினுள் இரண்டு மனித உருவ பொம்மைகளும், விமானநிலையத்தின் அமைப்பிலேயே கட்டடபொம்மை ஒன்றும், சின்னஞ்சிறிய கைப்பெட்டிகள், கொக்கிகள், தலைக்கவசங்கள், மரங்கள், பூச்செடிகள் என்று ஏராளமான சின்னஞ்சிறிய விளையாட்டுப்பொருட்களும் நிறைந்திருந்தன.

விமானநிலையக் கட்டடபொம்மையின் சிறப்பு என்ன தெரியுமா? அதன் யன்னல்கள் கதவுகள் எல்லாம் திறக்கக்கூடியவிதத்தில் அமைந்திருந்தன. அதன் கூரையிலே ஒரு ரேடார் பொருத்தப்பட்டிருந்தது. அதை அங்குமிங்கும் அசைக்கக்கூடியதாயுமிருந்தது. தரையிறங்கிடும் பொம்மை விமானத்தின் அசைவுகளையெல்லாம் கவனித்திட இந்த ரேடார் உதவிடுமல்லவா.

இவற்றைவிட அட்டைப்பெட்டியினுள் சதுரவடிவமான சில பிளாஸ்ரிக்தட்டுகள் காணப்பட்டன. அவற்றை ஒன்றுடன் ஒன்று சேர்த்து இணைத்து விமான ஓடுபாதை ஒன்றை அமைத்திடலாம். இவற்றையெல்லாம் பார்த்த வாசுவின் தாயார்

மகனைக்கட்டிக்கொண்டு, செல்லமாக அவன் தலையைத்தடவிக்கொடுத்தார். ''பார்த்தாயா வாசு உனது மாமா எவ்வளவு அன்புமிக்கவர். அருமையான பொம்மைகளை உனக்கு அனுப்பியுள்ளார்''. என்று ஆனந்தமாகச் சொன்னார். தனது தம்பியின் அன்பை எண்ணி அம்மாவின் கண்கள் கலங்கியிருந்தன.

விமானத்தைக் கைகளில் எடுத்த வாசு, அதைத்திருப்பித்திருப்பிப் பார்த்தான். சிவப்பு விமானத்தின் செட்டையிலும், வால்பகுதியிலும் பொருத்தப்பட்டிருந்த விளக்குகள் உண்மையிலேயே எரியக்கூடியவையா என்பது அவனுக்கு சந்தேகமாயிருந்தது. மூக்கில் பொருத்தப்பட்டிருந்த காற்றாடியை கைவிரல்களால் சுழற்றிப் பார்த்தான். இறப்பர்ச்சில்லுகள் உண்மையிலேயே காற்றால் நிரப்பப்பட்டவை போலிருந்தன. மின்கலங்களை இணைக்குமிடம் விமானத்தின் வயிற்றுப்பாகத்தில் இரண்டு சில்லுகளுக்கும் நடுவில் இருந்தது. அந்த இடத்திலேயே சிவப்புநிற ''சுவிற்ச்'' ஒன்றும் காட்சியளித்தது. விமானத்தை இயக்கிடும் விசை அதுவாகும். மின்கலங்களை இணைத்து இயங்கும் சுவிற்சைத் திருப்பி விமானத்தை இயங்கச்செய்தான் வாசு.



விமானத்தின் மூக்கில் பொருத்தப்பட்டிருந்த காற்றாடி விர்ரென்ற ஓசையுடன் வேகமாகச் சுழன்று இயங்கியது. வாசுவின் ஊகம் சரியானதே. செட்டைகளிலும், வாலிலும் பொருத்தப்பட்டிருந்த சின்னஞ்சிறிய விளக்குகள் மின்னிமின்னி எரிந்தன. அவற்றைவிட மூக்குப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த வெள்ளைநிற முகப்பு விளக்கு வாசுவின் குதூகலத்தை இன்னும் பலமடங்காக்கியது. இருள்நேரங்களில் பொம்மைவிமானம் தரையிறங்கி, ஓடுபாதையில் சீராக ஓடிட அந்த முகப்பு விளக்குப் பெருந்துணையாயிருக்குமல்லவா!.

விமானத்தின் இருக்கையில் மனித உருவபொம்மை ஒன்றை எடுத்து வசதியாக அமர்த்தினான். அதற்கேற்றது போல அந்த மனித பொம்மையின் கைகளையும், கால்களையும் அசைத்துத்திருப்ப முடிந்தது. அட்டைப்பெட்டியிலிருந்த சின்னஞ்சிறிய தொப்பிகளில் ஒன்றை எடுத்து விமானிக்கு அணிவித்தான்.

விர்ரென்று சுழன்று இயங்கிடும் காற்றாடிகளும் மினுக்மினுக்கென்று எரிந்து அணையும் குட்டிவிளக்குகளும் விமானம் கிளம்பத் தயாராயிருக்கிறது என்பதை அறிவித்தன. விமானத்தைக் கையிலெடுத்த வாசு மெதுவாக அதை ஓடுபாதையில் தரையிறங்கி ஓடச்செய்தான்.

அங்கிருந்து எழுந்து சென்ற அம்மா, தனது அறையிலே வைத்திருந்த குட்டிமேசை ஒன்றை எடுத்து வந்தார். ''வாசு உனது பொம்மைகளை இந்த மேசைமேல் வைத்து இணைத்திடு" என்று அன்பாகச் சொன்னார். தாயாருக்கு நன்றி மிகச்சொல்லிய வாசு, தனது விமான நிலையபொம்மையையும், ஓடுபாதையையும் எடுத்து அந்தக்குட்டிமேசைமீது வைத்தான். ஓடுபாதையில் சிவப்பு

விமானத்தை அழகாக நிறுத்தி வைத்தான். சிவப்பு விமானம் அமைதியாய் நின்றிருந்தது. '' விமான நிலையக்கட்டட வேலைகள் முடிந்ததும் இங்கிருந்து விமானம் பறந்து செல்லும்" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான் வாசு.

தேனீர் தயாரித்து எடுத்துவர சமையலறைக்குச்செல்ல எழுந்த அம்மா, பெட்டியினுள் இருந்த மலர்ச்செடி பொம்மை ஒன்றை எடுத்து ஓடுபாதையின் அருகே நிறுத்தி வைத்தார். அம்மாவைப்பார்த்துக் கலகலவெனச்சிரித்த வாசு, ''அம்மா எமது விமானநிலையத்துக்கு என்ன பெயர் வைக்கலாம்?" என்று கேட்டான்.

''யாழ்ப்பாண சர்வதேச விமானநிலையம்'' என்று சொல்லிய அம்மா வாசுவை இறுகக்கட்டித் தழுவினார். அம்மாவின் கண்கள் கலங்கியிருந்தன. அருமையான பெயர் அம்மா! என்று துள்ளிக்குதித்தான் வாசு. விமான ஓடுபாதை ஓரமாய் அம்மா நட்டிருந்த மலர்ச்செடியில் பலவண்ண மலர்கள் கண்சிமிட்டிச்சிரித்தன.



# அன்னை

இருண்ட மேகங்கள் அள்ளித்தெளித்த மழைத்துளிகளை உரசிக்கொண்டு வேகமாய் சுழன்று வீசியது பெருங்காற்று. நேரம் ஏழாகிவிட்டது. நேற்றிரவிலிருந்து இடைவிடாது பொழிந்து கொண்டிருந்த மழைமேல் செல்விக்குப்பெருங்கோபம் உண்டாயிற்று.

அடுப்பை ஊதி எரியச்செய்தாள் செல்வி. ஈரமான விறகுகளிலிருந்தும் எரிந்து வெண்புகை கண்களில் எரிச்சலை உண்டாக்கியது. அறையிலிருந்து அம்மாவின் இருமல் சத்தம் இடைவிடாது கேட்டது. அடுப்பைப்பாதியிலே விட்டுவிட்டு அறைக்கு ஓடிவந்த செல்வி, கட்டிலில் படுத்திருந்த அம்மாவினருகே அமர்ந்துகொண்டாள். அம்மாவின் தூக்கம் இன்னும் கலையவில்லை. ஆனால் தூக்கத்திலும் அந்தப்பாழாய்ப்போன இருமல் அவரை விட்டு விலகவில்லை.

தாயின் நெற்றியில் கலைந்து பரவிக்கிடந்த முடிகளை கையால் கோதிச்சரிபடுத்திய செல்வி, அவரின் கன்னங்களில் அன்பாய் முத்தமிட்டாள். ‘‘எவ்வளவு அழகானவர் எனது அம்மா’’ என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்ட செல்வியின் கண்கள் கலங்கின. அழகு மட்டுமல்லாது, நிறைந்த அன்பும், உயர்ந்த பண்பும் அறிவும் கொண்ட தனது தாயார் மரத்திலிருந்தும் உதிர்ந்து வற்றலாகிப்போன சருகுபோல படுக்கையில் படுத்திருப்பது செல்வியின் மனதிலே இன்று நேற்றல்ல கடந்த இரண்டு வருடங்களாகவே புரையோடிப்போன புண்ணாக சொல்லிடமுடியாத வேதனையை உண்டாக்கியது.

செல்வியின் தாயார் நோயாளி ஆகி படுக்கையில் விழுந்ததற்குகாரணம் சில மனிதர்களே!. அவருக்குச் சொந்தமான அந்தப்பென்னம்பெரிய மாஞ்சோலையை, சொந்த மகள் என்றும் யோசிக்காது சூது பண்ணி ஏமாற்றிய தனது பாட்டனாரைப்பற்றி யோசிக்கும்போதெல்லாம் செல்விக்குப்பெருங்கோபம் பிறக்கும். வலிமை மிக்க அந்த மனிதருடனும், பொல்லாத உறவினர்களோடும் பேசி வாதம்செய்ய அம்மாவாலேயே முடியாத போது பாவம் சிறுபெண்ணான செல்வி என்ன செய்வாள்?. மாந்தோட்டம் பறிபோனது செல்வியின் தாயாரின் மேல் பேரிடியாய் விழுந்து மென்மையான அவரின் மனதைக் கண்ணாடி போலச் சிதறிடச்செய்தது.

ஏமாற்றம் தந்த முடிவுகள் செல்வியின் தாயாரின் உடலும், மனமும் நோய் கண்டிடச்செய்தன. அன்றிலிருந்து இன்றைவரை அவரின் நிரந்தரமான வசிப்பிடமாக அந்தக்கட்டில் மாறிப்போயிற்று. செல்வியைத்தவிர யாருடனும் அம்மா பேசுவதில்லை. நோயின் ஆரம்ப நாட்களில் அவரது நிலைமை மிகவும் மோசமாயிருந்தது. தனக்குத்தானே பேசிக்கொண்டும், யன்னலைத்திறந்து தெருவில் போய்வருவோரை சிலைபோல் நின்று வேடிக்கை பார்த்தும், வீட்டுக்கு வரும் செல்வியின் சிநேகிதிகளை சில நேரங்களில் திட்டித்துரத்தி ஆர்ப்பாட்டம் செய்தும் அம்மாவின் காலம்கழிந்திருந்தது. வீட்டுக்குவரும் சிநேகிதிகளின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்தது. ''ஏன் உனது அம்மா இப்படி இருக்கிறார்'' என்று கிண்டலாகக் கேட்கும் சிலரது போக்கு அந்த நாட்களில் செல்வியின் மனதிலே பெருவேதனையைத் தோற்றுவித்திடும். இவ்வாறாக கேடுகெட்ட சில உறவினர்களதும், ஊரார்களதும், பள்ளித்தோழிகளினதும் கிண்டல்களும் கேலிப்பேச்சுக்களும் காலப்போக்கிலே

செல்வியின் மனதை இறுக்கிப் பாறாங்கல்லுப் போலாக்கின.

நாய்கள் குலைத்திடுவதைக் கண்டு பயந்திடுமா என்ன இறுகிப்போன குன்று? தாயாரினருகே வந்தமர்ந்து அவர் கன்னங்களில் முத்தமிடும்போதுதான் அந்தக் கேலிப்பேச்சுக்களினால் உண்டான வேதனை எல்லையைக்கடந்து குமுறிடும் அழுகையாக வடிவுபெறும். குமுறிக்குமுறி அழுதிடுவாள் செல்வி. அமைதியாய்க் கண்களை மூடித்தூங்கும் தாயாரின் முகத்தைப்பார்த்து ''ஏன் நீ இப்படி இருக்கிறாய் அம்மா!'', என்று மெல்லிய குரலில் கேட்பாள்.

நல்ல டாக்டரிடம் காட்டினால் விரைவில் குணமடைந்துவிடுவார் உனது அம்மா என்று பெரியவர்கள் பலர் ''புத்திமதி'' சொன்னார்கள். ''நோயாளியான உனது தாயாரை ஏன் இப்படி வீட்டிலேயே வைத்திருக்கிறீர்கள் ஏதாவது வைத்தியசாலையில் கொண்டுபோய் சேர்த்தால் உங்களுக்கும் சிரமமிருக்காதே!'' இப்படியான ஆலோசனையையும் சொன்னார்கள் ''நெருங்கிய உறவினர்கள்'' சிலர்.

செல்வியின் தந்தையாருக்கு ஏகப்பட்ட சகோதரிகள். வாரத்திலே ஏழுநாட்களும் அவர்களில் ஒருவர் மாறி ஒருவராக செல்வியின் வீட்டுக்கு விஜயம் செய்வார்கள். ஆறுதல் சொல்லி, உதவி செய்வதற்காக அல்ல. பொழுதுபோக்கிடவும், மாலைநேரங்களில் ஊர்த்தெருவிலே கூடி வெட்டிப்பேச்சுப் பேசிட நல்லதொரு விடயத்தைத் தெரிவு செய்து எடுத்துச்செல்வதற்காகவுமே அவர்கள் அங்கு வருவார்கள்.

நோயாளித்தாயாரின் அருகிலும், தொல்லைதரும் உறவினர்கள் மத்தியிலும், கேலிபேசிடும் அயலவர்களின் முன்னிலும் செல்வி தனது மனத்தைரியத்தை இழந்துவிடவில்லை. அன்பும், அழகும், அளப்பரிய அறிவும் கொண்ட அருமையான சிறுமி அவள்.

செல்வியின் தந்தையார் வெகுதொலைவிலிருந்த நகரமொன்றில் வேலை செய்துவந்தார். வார இறுதி நாட்களில் மட்டுமே வீடு வந்திடுவார். தந்தையார் வீட்டிலிருக்கும் நாட்களில் செல்வியின் வேலைப்பழு சிறிது குறைந்திடும். தாயாரைக்கவனிப்பதிலும், சமையல் வேலைகளைப் பார்ப்பதிலும் தந்தையார் மூழ்க்கிக்கொள்ள, வீட்டுப் பாடங்களை எழுதுவதிலும், பாடல்கள், கவிதைகள் வரைவதிலும் பூச்செடிகளை நாட்டி மகிழ்வதிலும் செல்வி நேரத்தைக் கழித்திருப்பாள்.



ஞாயிறு மாலையில் இரயில் வண்டி ஏறி மீண்டும் வேலைக்குப் பயணப்படும் தந்தையாரைக் கலங்கும் கண்களுடன் வழி அனுப்பிடுவாள் செல்வி. அப்பா வீட்டிலிருக்கும் போது அயலவர்களும் சரி, உறவினர்களும் சரி தங்கள் மூக்கை இங்கு நுழைப்பதில்லை. அப்பாவின் கண்டிப்பான குணம் அவர்களுக்கு நன்கு தெரியும்.



அம்மாவின் அருகே அமர்ந்து அவர் முகத்தையே பார்த்து தன்னை மறந்திருந்த செல்வியின் சிந்தனையைக் கலைத்தது, சமயலறையில் கேட்டதொரு சத்தம். அறையிலிருந்தும் விரைந்து சமையலறைக்கு வந்தாள். பால் பானையின் மூடியைத்தட்டித்திறந்து, பாலை சுவைபார்த்திடும் தருணத்தில் அங்கு செல்வி வந்ததால் கோபமும் திகிலும் கொண்டதொரு குட்டிப்பூனையார், செல்வியை முறைத்துப்பார்த்துவிட்டு யன்னல் வழியாக வெளியே குதித்து ஓட்டம் பிடித்தார். பூனைக்குட்டியாரின் செயலைக்கண்டு சிரித்துக்கொண்டே, அணைந்திருந்த அடுப்பை ஊதி எரியச்செய்தாள் செல்வி. மணி ஏழரை வேகவேகமாய் பால்கஞ்சி தயாரித்து முடித்த செல்வி, தாயாரை மெதுவாய் எழுப்பி அவருக்கு கஞ்சியை ஊட்டினாள். காலையில் தினமும் அம்மாவுக்கு பால்கஞ்சியும், மாத்திரைகளும் கொடுத்துவிட்டுத்தான் பாடசாலை செல்வாள் செல்வி. பாடசாலை முடிந்து அவள் வீடு திரும்பிய பின்னரும் மாத்திரைகளின் வசப்பட்டு தன்னைமறந்து தூங்கியிருப்பார் அம்மா.

வாரஇறுதி நாட்களில் வரும்போது தவறாது அப்பா வாங்கிவரும் ஜாம் போத்தல்கள் எப்போதுமே வீட்டிலிருப்பதால், பாண்துண்டுகளுடன் தனது பசியைப்

போக்கிக்கொள்வது செல்வியின் வழக்கமாகும். வேகவேகமாய் ஜாம் பூசிய இரண்டு பாண்துண்டுகளை எடுத்து சாப்பாட்டுப்பெட்டியிலே வைத்துக்கொண்டு, புத்தகப்பையையும் தோளிலே மாட்டிக்கொண்டு பாடசாலைக்கு விரைந்து ஓடினாள் செல்வி.



வகுப்பிலே எப்போதும் முதலாவது மாணவி செல்விதான். நோயாளித்தாயாரின் அருகிலும், தொல்லைதரும் உறவினர்கள் மத்தியிலும், கேலிபேசிடும் அயலவர்களின் முன்னிலும் தனது மனத்தைரியத்தை இழந்திடாமல் சிறப்பாகப் படித்தாள் செல்வி. செல்வியின் ஆசிரியர்கள் எல்லோருமே அவள்மேல் மிகுந்த அன்பு செலுத்தினார்கள். ஒரு இலட்சியச்சிறுமியாய் அவளை உதாரணம்காட்டி மற்றைய மாணவிகளுக்குப் புத்தி சொன்னார்கள். அந்த வேளைகளில் அவளது வகுப்புச் சிநேகிதிகள் பலரது கண்களிலும் பொறாமை என்னும் புயல் குமுறி வீசிடும். எனினும் நல்ல மனம் கொண்ட சில சிநேகிதிகளையும் கொண்டிருந்தாள் செல்வி. நடந்துமுடிந்த பரீட்சைகளிலெல்லாம் சிறப்பாய்த்தேறி முதலிடம் பெற்றிருந்தாள் செல்வி.

நாளைக்குப் பரிசளிப்பு விழா என்பதை மீண்டுமொருமுறை நினைவு படுத்தினார் வகுப்பாசிரியை. பரீட்சைகளில் சிறப்பாகத்தேறியவர்களைப்பாராட்டுவதற்கும், அவர்களுக்கு நல்ல பரிசுப்பொருட்களை வழங்குவதற்குமாகவே அந்தப்பரிசளிப்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சுத்தமான சீருடைகளையும், நல்ல சப்பாத்துக்களையும் அணிந்து வந்திடவேண்டும் என்று வகுப்பாசிரியை கண்டிப்பாகச்சொன்னார். பெரியபெரிய பிரமுகர்களெல்லாம் நாளை நடக்கப்போகும் விழாவிலே கலந்து கொள்ள இருப்பதால் ஆசிரியர்களெல்லாம் பரபரப்புடன் அங்குமிங்கும் ஓடி விழாவுக்கான ஆயத்தவேலைகளில் மூழ்கியிருந்தார்கள்.

பள்ளிமுடிந்து வீடு வந்த செல்வி மிகவும் பரபரப்பாயிருந்தாள். வேகவேகமாய் சமையல் வேலைகளை முடித்து, அம்மாவுக்கு ஊட்டிவிட்டு தானும் சாப்பிட்டாள். முன்னதாகவே தோய்த்து அலமாரியினுள் மடித்துவைத்திருந்த சீருடையை எடுத்துப்பார்த்தாள். ''எவ்வளவுதான் தோய்த்தாலும் இந்தப்பாழாய்ப்போன பழுப்புநிறம் மறையாது'', என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டவள் பாதி அறுந்து தொங்கியிருந்த பொத்தானை தைத்து உறுதியாக்கினாள். சீருடையை மீண்டும் கவனமாய் மடித்து அலமாரியினுள் வைத்தாள். சப்பாத்துக்களைக் கழுவிக்காயவைத்தாள். கண்ணாடி முன் வந்து நின்று தலைவாரி, தன்னிடமிருந்த கறுப்பு றிப்பன்களையும், சிவப்பு றிப்பன்களையும் மாறிமாறிக்கட்டி அழகுபார்த்தாள். இறுதியாக நாளைக்கு சிவப்பு றிப்பனையே கட்டிச்செல்வதென்றும் முடிவுசெய்தாள். பரிசளிப்பு விழா செல்வதற்கான ஆயத்த வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு அம்மாவின் அருகே வந்தமர்ந்தாள்.

பள்ளிமுடிந்து வந்ததுமே தூங்கிக்கொண்டிருந்த தாயாரின் அருகே சென்று அவர் காதுகளில் ''அம்மா வகுப்பில் நான்தான் முதல் மாணவி'', என்று சொல்லிவிட்டாள். தான் சொல்லும் எவற்றையுமே கேட்கும் நிலையில் அம்மா இல்லை என்பது செல்விக்கு நன்கு தெரியும். ஆனால் அம்மாவைத்தவிர, மகிழ்ச்சியான அந்த விடயத்தை வேறுயாரிடம் சொல்ல முடியும் அவளால்? தூக்கம் கலைந்து கண்கள் திறந்து எங்கோ வெறித்துப்பார்த்திருக்கும் தாயாரின் அருகில் சென்று அமர்ந்து அவர் நெஞ்சிலே தன்முகம் பதித்து நடந்த சம்பவங்களையெல்லாம் சொல்லுவாள் செல்வி. அப்படிச்சொல்லும் போதெல்லாம் மனதிலே நிறைந்திருந்த பாரம் குறைந்து, மனம் இலேசாகிப் போவதையும் உணருவாள். பேசிமுடித்து அம்மாவின் முகத்தைப்பார்ப்பாள். அப்போதெல்லாம் ஆழ்ந்து தூங்கியிருப்பார் அம்மா. அன்புடன் தாயின் நெற்றியைத்தடவி, அவர்கன்னங்களில் முத்தமிட்டு, மனத்திலிருந்த கவலைகளையெல்லாம் மறைந்துபோனதொரு உணர்வோடு தனது வேலைகளைத்தொடருவாள் செல்வி.

அதிகாலையிலேயே எழுந்துவிட்டாள் செல்வி. குளித்துவிட்டு மளமளவென்று வீட்டுவேலைகளையும் செய்துமுடித்தாள். சூடான கஞ்சியையும், மாத்திரைகளையும் எடுத்துக்கொண்டு அம்மாவினருகே சென்று அமர்ந்தாள். அம்மாவின் முகத்திலே இன்று ஏதோ ஒரு வித்தியாசம் நிலவியது. தன்னருகே வந்தமர்ந்த செல்வியைக்கனிவுடன் பார்த்துச்சிரித்தார் தாயார். செல்விக்கு மகிழ்ச்சி தாங்கமுடியவில்லை.

நோய்வாய்ப்பட்டு படுத்து இந்த இரண்டு வருடங்களில் எப்போதுமே இவ்வளவு தெளிவாயிருந்ததில்லை அம்மாவின்

கண்கள். ''அம்மா குணமாகிவிட்டாரோ!", செல்வியின் மனதிலே பொங்கிய மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. ''படுக்கையிலிருந்தும் அம்மா துள்ளி எழுந்து என்னைக்கட்டிக்கொண்டு முத்தம் கொடுத்தால் எப்படியிருக்கும்!" தன்னந்தனியாகச்சென்றிடாது அம்மாவையும் பரிசளிப்பு விழாவுக்குக்கூட்டிச்சென்றிட செல்வி துடியாய் துடித்தாள். முதல்மாணவியாய் நான் பரிசுவாங்குவதைக்கண்டால் அவர் எவ்வளவு சந்தோஷப்படுவார்!.

அம்மாவின் பார்வை இப்போது வேறு திசையில் திரும்பியிருந்தது. பரிசுவாங்கச்செல்லும் தனது அன்புமகளை ஆசீர்வாதம் செய்வது போலிருந்த அன்புநிறைந்த அம்மாவின் பார்வை ஒருசில நொடிகள்தான் நீடித்தது போலும். மீண்டும் பழைய நிலைதான். அம்மா! அம்மா என்று அழைத்துத் தொண்டை வற்றியதுதான் மிச்சம். செல்வியின் குரலுக்கு எவ்விதமான உணர்ச்சிகளையும் காட்டமுடியாத நோய்வாய்ப்பட்ட அன்புத்தாயார் யன்னல் வழியாய்த்தெரிந்த அந்தத்தென்னை மரத்தையே வெறித்துப்பார்த்திருந்தார்.

செல்வியின் கண்கள் கலங்கின. அம்மாவுக்கு கஞ்சியை ஊட்டிவிட்டாள். மாத்திரைகளையும் அவர் வாயில்போட்டுத்தண்ணீர் பருக்கினாள். உணவு அருந்துவதும், மாத்திரைகளை விழுங்குவதும் இயந்திரம்போல அம்மா செய்யும் அன்றாடப்பணிகளாகும்.



தாயாருக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளை எல்லாம் செய்து முடித்து, சீருடையையும், சப்பாத்துக்களையும் அணிந்துகொண்டாள் செல்வி. தலையைவாரி, சிவப்புநிறமான றிப்பன்களையும் சூடிக்கொண்டாள். வேகமாய் நடந்து பள்ளிக்கு விரைந்தாள். அவ்வளவு பரபரப்பான நிலையிலும் பள்ளி சென்றிடும் வழியிலிருந்த அந்த மாமரத்தைக்கவனித்திட அன்றைக்கும் செல்வி தவறிடவில்லை.

மாமரத்திலிருந்த காய்களைப் பறித்திடுவதில் சிறுவர்கள் சிலர் மும்முரமாயிருந்தார்கள். அங்கே ஓடிச்சென்ற செல்வி அவர்களிடம் இரண்டு மாங்காய்களைக்கேட்டு வாங்கினாள். பத்திரமாகத் தன்பையிலே மாங்காய்களை வைத்துக்கொண்டவள் மீண்டும் தனது பயணத்தைத் தொடர்ந்தாள்.

புளிப்பான அந்த மாங்காய்களின்மேல் சுண்ணாம்பைத் தடவிச் சாப்பிட்டால் புளிப்புநீங்கி, பள்ளி முடிந்து பசித்திருக்கும் வேளைகளில் அமுதம் போன்றல்லவா அவை இனித்திடும்!.

பரிசளிப்பு விழா சிறப்பாய் நடந்தது. முதல்பரிசு வாங்கிய செல்வியை விழாவுக்கு வந்திருந்தவர்கள் எல்லாரும் பாராட்டினார்கள். விழாவின் சிறப்பு விருந்தினர்களில் சிலர் செல்வியிடம் அவளது பெற்றோர்கள் எங்கே என்று ஆவலோடு விசாரித்தார்கள். திறமைமிக்க அந்நச்சிறுமியைப்பற்றி அவளது தாயாரிடம் புகழ்ந்து பேசிட அவர்கள் மிகவும் விரும்பினார்கள்.

செல்வியின் கண்கள் கலங்குவதைக்கண்ட அவளது வகுப்பாசிரியை பேச்சை வேறு திசையில் மாற்றி, அவர்களிடம்

செல்வியின் திறமைகளையெல்லாம் புகழ்ந்து சொல்லத்தொடங்கினார். பரிசளிப்பு விழாவுக்கு வந்திருந்த மாணவர்களின் தாயார்களெல்லாம் வகுப்பாசிரியையிடம் வந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

அவர்களையெல்லாம் பார்த்த செல்வியின் பிஞ்சு மனதிலே சொல்லமுடியாத வேதனையொன்று படர்ந்து பரவியது. ''என்னுடைய அம்மாவுக்கு மட்டும் ஏன் இப்படியொரு நிலைமை, மற்றவர்களது அம்மாக்களைப்போல் ஏன் எனது அம்மாவும் இங்கே வரவில்லை! வந்திருந்தால் எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பார்''. கண்களில் பொங்கிய கண்ணீரை தலையைக்குனிந்து மறைத்திடமுயன்றாள் செல்வி.

வேதனைகளை பிறருக்குக் காட்டிக்கொள்ளாது மனதிலே புதைத்துவைத்திருக்கலாம். ஆனால் அவை தங்களது எல்லையை மீறிடும்போது பொல்லாத கண்ணீர்த் துளிகளாயல்லவோ வடிவம் பெற்றுவிடுகின்றன. அவற்றுக்கு அணைபோட்டுத்தடுத்திட நமது கண்கள் ஒன்றும் நீர்த்தேக்கங்கள் அல்லவே!.

பரிசளிப்பு விழா முடிந்து எல்லாரும் வீடு திரும்பிக்கொண்டிருந்தார்கள். தனக்குப்பரிசாய்க்கிடைத்த அழகான புத்தகங்களைப் பக்குவமாய்த் தனது பையிலே வைத்துக்கொண்டு வீடுநோக்கி விரைந்து நடந்தாள் செல்வி.

''இப்படியானதொரு கெட்டிக்காரச்சிறுமியை எங்கள் பாடசாலைக்குக்கொடுத்ததற்கு உங்களுக்குத்தான் முதல் பாராட்டுக்கள் சேரவேண்டும்'' மலரின் வகுப்பாசிரியையின் குரல் செல்வியின் சிந்தனையைக் கலைத்தது. செல்வியின் அன்பு மகள் மலர். இரண்டாம் வகுப்புப்படிக்கிறாள்.

எல்லாப்பாடங்களிலும் முதல் பரிசு வாங்கியிருக்கிறாள். பரிசளிப்பு விழாவுக்கு வந்த ஏனைய மாணவர்களின் தாயார்கள் எல்லாரும் செல்வியினருகே வந்து தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். அவளது அன்புமகள் மலரின் திறமைகளையெல்லாம் பாராட்டிப்பேசினார்கள்.

''பார்த்தீர்களா அம்மா எனக்குப்பரிசாகக் கிடைத்த இந்தப்புத்தகத்தை'', என்று சொல்லித்தன்னைக் கட்டியணைத்து கன்னத்தில் முத்தமிட்ட மலரை வாரியயெடுத்து மடியில் வைத்துக்கொண்டாள் செல்வி. அவளது கண்கள் கலங்கியிருந்தன. மனதிலே நிறைந்திருந்த மகிழ்ச்சியின் மத்தியிலும், மறைந்த தனது தாயாரின் அன்புமுகத்தையே நினைத்திருந்தாள் செல்வி. மலையளவுக்குப் பேரும் புகழும் வந்து வாய்த்தாலும், கடலளவு பொன்னும், பொருளும் சேர்ந்து குவிந்தாலும் அன்னையின் அன்பின் முன்னால் போட்டிபோட்டு நின்றிடமுடியுமா என்ன அவற்றால்? பெற்றதாயை மறந்தவர்கள் உருப்பட்டதுமில்லை. கோடிக்கணக்கான படிகள் ஏறி வானின் எல்லைவரை சென்றபோதிலும் இறுதியில் அப்படியானவர்களை எதிர்நோக்காதிருப்பது ஆழமான பாதாளம்தான்!.



# பள்ளிக்குச்சென்றேன்

"நிச்சயமாய் நீ பள்ளி செல்லவேண்டும்!" என்ற வார்த்தைகள் கடந்த சில நாட்களாகவே காலையிலிருந்து மாலைவரை இடைவிடாது அம்மா சொல்லிவரும் மந்திரமாகிவிட்டது. பள்ளிக்குச்செல்லவதென்றாலே ஏதோ ஒருவிதமான வெறுப்பு என் மனதில் தோன்றிடும். சுதந்திரமாக ஓடிஆடி விளையாடும் என் கழுத்தில் பயங்கரமானதொரு இரும்புச்சங்கிலியைக்கட்டி இறுக்குவது போலிருந்தது "பள்ளி" என்ற வார்த்தை.

"பள்ளி சென்று படித்தால்தான் எல்லாரும் பாராட்டும் திறமையானவனாக வரமுடியும்" என்ற அம்மாவின் அறிவுரைகள் "எனக்கு இன்றைக்குச் சாப்பாடே வேண்டாம்", என்ற எனது உண்ணாவிரதப் போராட்டத்துக்குத்தான் வழிவகுத்தன. என்னைப் பள்ளிக்கு அனுப்பியே தீருவேன் என்று ஒற்றைக்காலில் தீவிரமாய் நின்றிடும் அம்மாவுக்கும், பள்ளிக்குப் போகவேமாட்டேன்! என்று அடம்பிடிக்கும் எனக்கும் நடுவில் மாட்டித்தவியாய்த்தவித்தார் அப்பா.



''பள்ளிக்குச் சென்றால் அருமையான குட்டி நண்பர்கள் உனக்கு வாய்ப்பார்கள்'', என்று புத்திமதி சொன்னார் அப்பா.

''யாருக்கு வேண்டும் அந்தக் குட்டி நண்பர்கள்? என்னிடம்தான் ஏராளமான பொம்மை நண்பர்கள் குவிந்து கிடக்கிறார்களே! அதைவிட நான் செல்லமாக வளர்த்துவரும் கறுப்புக்குண்டுபூனையாரைவிட மேலதிகமாக எனக்கு வேறு நண்பரும் தேவையா என்ன நீங்களே சொல்லுங்கள்!.''



நாட்கள் சில ஓடின. ஒருநாள் மாலையிலே முற்றத்தில் விளையாடிவிட்டு சமயலறைப்பக்கமாகத் தண்ணீர் குடிக்கப்போன என் காதுகளில் அம்மா இரகசியமாக அப்பாவுடன் பேசி ஒரு பயங்கரமான திட்டத்தைத்தீட்டுவது கேட்டது. சமயலறை வாசலருகே பதுங்கி நின்று அம்மாவும் அப்பாவும் பேசும் விடயத்தை ஒட்டுக்கேட்டேன்.

''நாளை காலையில் கண்டிப்பாக தம்பியை நீங்கள் பாடசாலைக்குக் கூட்டிச்செல்லுங்கள்''. அம்மாவின் கண்டிப்பான குரல். அம்மாவின் கட்டளையைத் தலைமேல் ஏற்றுச் சம்மதம் சொன்னார் அப்பா. அப்பாவின் மேல் எனக்குப்பொல்லாத கோபம் பிறந்தது. அதைவிடப்பலமடங்கு கோபம் அம்மா மேல்தான். பள்ளி செல்லமாட்டேன் என்று

எவ்வளவோ சொன்னபோதிலும் என்பேச்சையே மதிக்காது என்னைப்பள்ளி அனுப்பிடத் திட்டம் தீட்டும் அம்மாவைப் பலமுறை என் மனதுக்குள்ளேளே சபித்துக்கொண்டேன்.

அன்று மாலையிலேயே கடைக்குச்சென்று எனக்குப்புதிய சப்பாத்துக்களும், புத்தகங்களும், பென்சில் மற்றும் சாப்பாட்டுப்பெட்டியும் வாங்கிவர அம்மாவும் அப்பாவும் முடிவு செய்ததையும் ஒட்டி நின்று கேட்டறிந்தேன். அதற்குமேலும் எனது மனநிலையைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா என்ன?

சத்தம் செய்யாது என் காலருகே வந்துநின்ற அருமை நண்பர் கறுப்புக்குண்டுப்பூனையார்தான் அப்போதைக்கு எனது ஆறுதல். காலருகே வந்து தனது வாலால் தடவிக்கொடுத்த குண்டுப்பூனையாரைத் தூக்கிக்கொண்டு, பொங்கிக்குமுறிய அழுகையையும் அடக்கிக்கொண்டு அங்கிருந்தும் எனது அறைக்கு விரைந்து ஓடினேன்.



அறையின் கதவை படாரென்று சாத்திவிட்டு குண்டுப்பூனையாரைக் கட்டிக்கொண்டு குமுறிக்குமுறி அழுதேன். அழுதுமுடிந்ததும் மனதிலிருந்த கவலையெல்லாம் மறைந்து ஆவேசமாய் மாறியது.

எனது அறையிலே எனக்குச்சொந்தமாக ஒரு குட்டி மேசையிருந்தது. அதிலே எனது பொம்மைகளை வைத்து விளையாடுவதும், அம்மா வாங்கிக்கொடுத்திருந்த தடிப்பான வரைதல் புத்தகத்தில் வண்ணக்கட்டிகள் கொண்டு படங்கள் வரைவதும் எனது அன்றாடப் பொழுதுபோக்குகளாகும்.



கோபம் மேலிட மேசையிலிருந்த வரைதல் புத்தகத்தைத் திறந்தேன். வண்ணக்கட்டிகளால் முட்டைக்கண்களும் கூரியபற்களும் கொண்ட குண்டு உருவம் ஒன்றை வரைந்தேன். அந்த உருவத்தின் கீழ் நான் எழுதிய வாசகம் என்ன தெரியுமா? ''அம்மா'' பின்பு பென்சிலை எடுத்துக் குண்டு உருவத்தின் கீழே மளமளவென்று ஏதோவெல்லாம் கிறுக்கினேன். பக்கம்பக்கமாக அம்மாவைப்பற்றிய புகார்களை எல்லாம் கிறுக்கித்தள்ளினேன். எனது கிறுக்கல்கள் எல்லாம் நீண்டதும், அலைபோன்றதுமான கோடுகளே. சின்னஞ்சிறுவனான

எனக்குப் பலமணிநேரமாக ஒரே இடத்தில் அமர்ந்து பக்கம்பக்கமாய் எழுதிமுடித்திடும் அப்பாவைப்போல எழுதும் ஆற்றல் இல்லையே!.



அப்படியாக சிலபக்கங்களைப் பூர்த்தி செய்தபிறகே எனது கோபம் அடங்கியதை உணர்ந்துகொண்டேன். எனது செயல்களையெல்லாம் மேசைமேல் அமர்ந்து, தூங்கிவழிந்து, பாதிக்கண்களால் பார்த்திருந்த குண்டுப்பூனையார் இப்போது மெதுவாய் எழுந்து உடலைவளைத்து சோம்பல்முறித்து ''மியாவ்!'' என்று சத்தமிட்டார்.



எனக்குப்பொல்லாத கோபம் பிறந்தது. எனினும் குண்டுப்பூனையார் என்ன செய்வார் பாவம். உண்மையிலேயே

எனது நிலைபற்றி அறிந்திருந்தால் அப்படி நடந்துகொள்வாரா என்ன!. கதவைத்தட்டித் ''தம்பி! தம்பி'' என்று அன்பாய் அழைத்த அம்மாவின் குரல் கர்ணகடூரமாய் என் காதுகளில் ஒலித்தது. வரைதல் புத்தகத்திலே வரைந்து வைத்திருந்த அம்மாவின் உருவத்தை அவரிடமே காட்டி எனது கோபத்தைத்தணித்துக்கொள்ளலாம் என்று நினைத்தேன். எனினும் கொய்யாமரத்தில் முறித்து, ஒன்றுக்கு இரண்டாக எப்போதுமே எனக்காகத் தயாராய் அவர் வைத்திருக்கும் பயங்கரமான குச்சிகள் மீது எனக்கு அப்போது பயம் அதிகம்.

வரைதல் புத்தகத்தை வேகவேகமாய் மேசை இலாச்சிகளில் ஒன்றினுள் இடம் மாற்றினேன். பின்பு எதுவுமே அறியாதவன் போல சென்று கதவைத்திறந்தேன். கண்களில் கருணைநிறைந்து, வாயிலே புன்னகை தவழ கையிலே தேநீர்க்கோப்பையுடன் அம்மா வாசலில் நின்றிருந்தார்.

''தம்பி!, தேநீர் குடியப்பா'' என்று அன்பாகச் சொல்லிய அம்மா தேநீர்க்கோப்பையை என் கைகளில் கொடுத்தார். அறைக்குள் நுழைந்து ஒரு கதிரையில் அமர்ந்தவர், என்னையும் தன்னருகே அமரச்சொன்னார். பள்ளிக்குச்செல்லவேண்டியதன் அவசியத்தைப்பற்றியும் மெதுவாய்ப்பேசத் தொடங்கினார்.

ஒருபுறமும், புத்தம்புதிய சப்பாத்துக்களையும் அழகான புத்தகங்களையும் அருமையான வண்ணக்கட்டிகள் மற்றும் பென்சில்களையும் வாங்கித்தருவதாகவும் அவற்றுடன் சேர்த்து நல்லதொரு பொம்மைமோட்டார் வண்டியையும் வாங்கித்தருவதாக அம்மா சொன்னது மறுபுறமுமாக சேர்த்து சிறிதுசிறிதாக என் கல்நெஞ்சத்தைக் கரைக்கத்தொடங்கியது. பேச்சின் மத்தியிலும் என் முகத்தையே கவனமாக

அவதானித்திருந்த அம்மா, அதில் தோன்றிய மாற்றங்களைக் கண்டுகொண்டு பள்ளி செல்வதால் ஏற்படும் நன்மைகளைப்பற்றி மேலும் விரிவாக விளக்கத் தொடங்கினார். ''பள்ளியிலே படிக்கும்போது குட்டிநண்பர்கள் பலர் உனக்கு வாய்ப்பார்கள். அவர்களையெல்லாம் உனது பிறந்தநாள் விழாவுக்கும் அழைத்திடலாமே!''

அதட்டல் மிரட்டல்களின்றி அன்பாக அம்மா சொன்ன வாசகங்கள் இப்போது என்மனதிலே பெரியதொரு மாற்றத்தை உண்டாக்கியது. பள்ளிமீதிருந்த வெறுப்பு நீங்கி விருப்பம் பிறந்தது. பள்ளிசெல்வதென்று இறுதியாக முடிவு எடுத்துக்கொண்டேன். ''அம்மா நான் பள்ளிக்குப் போகிறேன்!'' என்று நான் சொல்லியதைக் கேட்ட எனது தாயார் பெருமகிழ்வு கொண்டார். ஓடிவந்து என்னைக் கட்டிக்கொண்டு உச்சிமோந்தார். எனது பிள்ளை எப்போதுமே என் பேச்சை தட்டமாட்டான் என்று சந்தோஷத்துடன் சொல்லிக் கொண்ட அம்மா, அப்பாவிடம் விரைந்து சென்றார்.

தனது முயற்சி பயனளித்துவிட்டது என்பதை அப்பாவிடம் சொல்லிக்காட்ட வேண்டுமென்பதில் மிகுந்த ஆர்வம் அம்மாவுக்கு. அம்மாவிடமிருந்தும், எனது ஆர்ப்பாட்டத்திலிருந்தும் தப்பிக்கொள்ள எண்ணி அப்பா எங்கு ஒழித்துக்கொண்டிருக்கிறாரோ தெரியவில்லையே.

மாலையிலே அம்மாவும் அப்பாவும் கூடவே நானும் கடைத்தெருவுக்கு சென்றோம். கறுப்புநிறச் சப்பாத்துக்கள் ஒருசோடியும், வெள்ளைநிறக் காலணிகள் இரண்டு சோடியும் வாங்கினோம்.

அதன்பிறகு அருகில் இருந்த புத்தககடைக்குச் சென்றோம். ''அப்பாவுடன் போய் உனக்கு தேவையான பென்சில்களையும், வண்ணக்கட்டிகளையும் தெரிவு செய்துகொள் தம்பி'', என்று சொல்லிய அம்மா, தனது கைப்பையைத் திறந்து அதிலிருந்து எடுத்துவைத்திருந்த காகிதத்தாளொன்றை எடுத்துப்பிரித்தார். அதைக் கடைக்காரரிடம் கொடுத்து அதிலிருக்கும் பாடப்புத்தகங்களையும், பயிற்சிபுத்தகங்களையும் தருமாறு கேட்டுக்கொண்டார்.

எனக்கோ வியப்பு தாங்க முடியவில்லை. எங்கிருந்து எனக்கு தேவையான பாடப்புத்தகங்கள் பற்றிய விபரங்களையெல்லாம் அம்மா அறிந்து கொண்டார்? அதுசரி என்னைப் பள்ளிக்கு அனுப்பும் நடவடிக்கையில் இன்று நேற்றா அம்மா ஈடுபட்டுள்ளார்? பள்ளிக்கே சென்று பாடப்புத்தகங்கள் பற்றிய விபரத்தை கேட்டு அறிந்திருந்தாலும் அறிந்திருப்பார்.

அம்மா புத்தகங்களைத் தெரிவு செய்வதில் மும்முரமாய் இறங்கியிருக்க, அப்பாவுடன் சேர்ந்து கடையின் வேறொரு பகுதிக்குச்சென்று எனக்குப்பிடித்தமான வண்ணப்பென்சில் பெட்டி ஒன்றையும், அழிஇரப்பர், பென்சில்கள், நோட்டுப்புத்தகங்கள், வரைதல் புத்தகம் என்று விதவிதமான பொருட்களைத் தெரிவு செய்துகொண்டேன். தொலைக்காட்சிப்பெட்டி வடிவிலே அமைந்திருந்த அழகான பென்சில் சீவும் கருவி ஒன்றை தெரிவு செய்து எடுத்துக்கொண்டேன். நான் தெரிவு செய்து எடுத்த கடும்பச்சைநிற அழிஇரப்பரின் அழகும், அதிலிருந்த பிறந்த அருமையான வாசனையும் என்னை மிகவும் கவர்ந்தன.

வரைதல் பத்தகத்தின் அட்டையில் வரையப்பட்டிருந்த பூனைக்குட்டியின் உருவம் அருமை நண்பர் குண்டுப் பூனையாரை எனக்கு நினைவுப்படுத்தியது. அந்தத் தருணத்திலே மெல்லியதானதொரு கவலையும் மனத்தில் பிறந்தது. பாவம் குண்டுப்பூனையாரை தன்னந் தனியாகவல்லவோ வீட்டில் விட்டு பள்ளி செல்லப்போகிறேன். அவரை பள்ளிக்கு கூட்டிச்சென்றால் எவ்வளவு நல்லாய் இருக்கும்!.

ஆழமான எனது பெருமூச்சுகண்டு, செல்லமாக தலையில் தடவிய அப்பா என் காதருகே மெல்லிய குரலில் ''பள்ளி செல்வதை எண்ணிக் கவலைப்படுகிறாயா அப்பா!'' என்று கேட்டார். அப்பாவுக்கு எப்போதுமே எனது விருப்பத்தை மீறி நடக்கப்பிடிக்கவில்லை. நான் கலங்குவதைக் காணவும் அவருக்குப் பிடிக்காது.

அதனால்தான் சிலவேளைகளில் அம்மாவுக்கும் எனக்குமிடையே நடக்கும் ஓட்டப்பந்தயம் ஒன்றின் ஆபத்தான முடிவுகளின் இடையே அப்பா மாட்டிவிடுவார். அது என்ன ஓட்டப்பந்தயம்? எனது குறும்புத்தனம் எல்லைமீறும்போதெல்லாம், எங்கள் வீட்டைச்சுற்றி சுற்றி நடப்பதே அந்த ஓட்டப்பந்தயம். புயலாய் ஓடும் என்னைப்பின் தொடர்ந்து, கையிலே கொய்யாக்கம்புடன் துரத்தி ஓடி வருவார் அம்மா. இரண்டு மூன்று சுற்றுக்கள் வீட்டைச்சுற்றி நடக்கும் அந்தப்பந்தயத்தின் முடிவில் அநேகமாய் அம்மா களைத்துப்போய் விடுவார்.

கொய்யாத்தடியை தூக்கி எறிந்துவிட்டு, சமயலறைப்படியிலே மூச்சிரைக்க அமர்ந்துகொள்ளும் அம்மா, எங்கள் வீட்டுக்குண்டுப்பூனையார் போலவே

பாதிகண்கள் மூடி பதுங்கியிருப்பார். எங்காவது அருகில் என் நடமாட்டம் தெரியும்போது பாயும் புலியாய் மாறி என்னை விரட்டிப்பிடித்துக்கொள்வார்.

அம்மாவின் தந்திரக்குணம் அறிந்தே அப்படியான சந்தர்ப்பங்களில் சிலமணிநேரங்களுக்காவது எனது ஒழிவிடத்தைவிட்டு நான் வெளியே தலைகாட்டுவது இல்லை. அம்மாவின் கோபம்பற்றி எனக்குத் தெரியாதா என்ன? ஒரு மணிநேரத்துக்கு மேல் அந்தக் கோபம் நீடிக்காது அல்லது அந்தத் தருணத்தில் விருந்தினர்கள் யாராவது வந்துவிட்டால் அப்படியொரு ஓட்டப்பந்தயம் நடந்ததைப்பற்றியே மறந்து விடும் அம்மா என்னை அழைத்து தன்னருகே அமர்த்தி, வந்திருக்கும் விருந்தினருக்கு அறிமுகம் செய்துவைப்பார்.

ஒருநாள் எனக்கும் அம்மாவுக்குமிடையே அப்படியொரு ஓட்டப்பந்தயம் நடந்துகொண்டிருந்தது. அம்மா சிறிது குண்டுத்தேகம் கொண்டவராதலால் பாய்ந்து ஓடும் எனது வேகத்துக்கு அவரால் ஈடுகொடுக்கமுடியவில்லை. ''அடேய் தம்பி ஓடாதே நில்!'', என்று மூச்சிரைக்கக் கத்திக்கொண்டே என்னைத் துரத்திய அம்மாவை இடை மறித்தார் அப்பா.

''சிறுவனுடன் சேர்ந்து நீயும் சிறுமிபோல எதற்குத் துள்ளிக்குதித்து ஓடுகிறாய்?'' என்று கிண்டலாக அப்பா கேட்டார். நான் முன்னரே சொல்லியிருக்கிறேனே! என்னைத்தொல்லைப்படுத்த அப்பா எப்போதுமே விரும்புவதில்லை. அவ்வளவுதான் என்மேலிருந்த கோபமெல்லாம் இப்போது முன்னிருந்ததை விடப்பன்மடங்காய் அதிகரித்து அப்பாவின் மேல் திரும்பியது. பாவம் அப்பா, பொங்கிக்குமுறிடும் அம்மாவைச்சமாளிப்பதற்குள் போதும்போதும் என்றாகிவிட்டது.

நான் தப்பித்துப்கொண்டேன். முடிவில் அம்மாவையும் அப்பாவையும் சமாதானம் செய்துவைக்கும் நடுவர்களாக நானும், குண்டுப்பூனையாரும் மாறிவிட்டோம். அதில் ஒரு சிறப்பு என்ன தெரியுமா! அம்மாவுக்கும் எனக்கும் ஓட்டப்பந்தயம் நடக்கும்போது குண்டுப்பூனையாரும் அதில் கலந்து கொள்ளுவார் என்பதே.

அம்மாவைவிட இன்னும் அதிகமான குண்டுத்தேகம் கொண்டவர் எனது குண்டுப்பூனையார். ஆதலால் அவர் எப்போதுமே அம்மாவைப் பின்தொடர்ந்து மூன்றாவது இடத்திலேயே இருப்பார், அல்லது கொய்யாமரத்துக் கிளைகளில் ஒன்றில் ஏறி அமர்ந்து நாங்கள் ஓடும் திசைகளை நோக்கித் தனது தலையை அங்குமிங்குமாகத் திருப்பி வேடிக்கை பார்த்திருப்பார்.

நாங்கள் தெரிவு செய்து கொடுத்த பொருட்களையெல்லாம் கடைக்காரர் பை ஒன்றில் போட்டுக்கொடுத்தார். அதற்குள் அம்மாவும் தான் தெரிவு செய்த புத்தகங்களை எடுத்துக்கொண்டு அங்குவந்து சேர்ந்தார். தனது கையிலிருந்த புத்தகம் ஒன்றை என்னிடம் கொடுத்து ''பார்த்தாயா தம்பி எவ்வளவு அழகான படங்களும், பாடல்களும் இந்தப்புத்தகத்தில் நிறைந்திருக்கின்றன.!'' அம்மா சொன்னது போலவே அருமையான புத்தகம் அது. பளபளவென மினுங்கிய அட்டையும், அதிலே வரையப்பட்டிருந்த பூக்களதும், சிறுவர்களதும் அழகிய படங்களும் என்னை மிகவும் கவர்ந்தன. அட்டையில் பெரிய எழுத்துக்களில் ''தமிழ்'' என்று எழுதப்பட்டிருந்தது. புத்தகத்தைப் பிரித்தபோது அதிலிருந்தும் பிறந்த புதியமையின் வாசனை என்னை மிகவும் கவர்ந்தது.

நானும் அப்பாவும் தெரிவு செய்துவைத்திருந்த பொருட்களையெல்லாம் பார்த்த அம்மா சந்தோஷத்துடன் சிரித்தார். தானே தெரிவு செய்து அழகான ''ரோஸ்'' வண்ணம் கொண்டதொரு பேனாவையும் வாங்கிக்கொடுத்தார். அந்த ''ரோஸ்'' வண்ணப் பேனாவை மூலமாக வைத்து முக்கியமானதொரு சம்பவம் என்பாடசாலை முதல்நாளில் நடந்துமுடிந்தது. அதைப்பற்றியும் பின்பு ஒரு சமயத்தில் எனது அன்புக்குரிய தம்பி தங்கைகளுக்கு நிச்சயமாகச் சொல்லிடுவேன்.

வீடு சென்றதும் அழகானதொரு சுருக்குப்பையைத் தைத்துத்தருவதாக அம்மா சொன்னார். நான் செல்லப்போகும் பள்ளியில் வண்ணப்பென்சில்கள், பேனைகள் மற்றும் கைவேலைக்குத் தேவையான கத்தரிக்கோல், பிசின் போன்ற பொருட்களையெல்லாம் போட்டு வைத்திடத் துணியினால் தைக்கப்பட்ட சின்னஞ்சிறயதொரு சுருக்குப்பையை ஒவ்வொரு மாணவனும் கொண்டிருக்க வேண்டுமாம்!. அதையும் இந்தப்பொல்லாத அம்மா அறிந்து வைத்துள்ளாரே!. பள்ளிக்குத்தேவையான பொருட்களையெல்லாம் வாங்கி முடித்ததும், கடைத்தெருவிலிருந்த ஐஸ்கிறீம் கடைக்குப் போகலாம் என்று அம்மா சொன்னார். புத்தகக்கடையில் புத்தகங்களையும் பொருட்களையும் தெரிவு செய்ததில் அம்மா களைத்துவிட்டார். தண்ணீர்த்தாகம் வாட்டியதால் தனக்கு ஒரு கோப்பை குளிரான சர்பத்தை . அம்மாவும், நான் ஐஸ்கிறீமும், அப்பா தனக்கு சூடானதொரு கோப்பை கோப்பியும் தருமாறு ஐஸ்கிறீம் கடைப்பணியாளரிடம் கேட்டுக்கொண்டோம். சரியென்று சொல்லிய பணியாளர் எங்களைப்பார்த்து அன்புடன் சிரித்துவிட்டு கடையின் முன்புறத்திலே கண்ணாடிப்பெட்டியினுள்ளிருந்த விதவிதமான இனிப்புவகைகளையும், உறைப்பான சிற்றுண்டிகளையும் ஒரு

தட்டிலே நிறைத்து எடுத்துவந்து மேசையில் வைத்தார். சிற்றுண்டிகளும் சேர்த்துச்சாப்பிட உறைப்பான குளம்பு நிறைந்த போத்தல் ஒன்றையும், மூன்று தட்டுக்களையும், கூடவே மூன்றுபெரிய கண்ணாடித்தம்ளர்களில் குளிர்ந்த நீரையும் எடுத்துவந்து வைத்தார்.

அம்மா குளிர்தண்ணீரில் சிறிதைக் குடித்தார். மூவரும் சிற்றுண்டிகளைச் சாப்பிட்டபின் ஐஸ்கிரீம், சர்பத் வகைகளையும் சாப்பிட்டு முடித்தோம். அடுத்த வேலையாக மோட்டார்வண்டி வாங்கிட பொம்மைக்கடைக்குள் புகுந்தோம். அரைமணிநேரமாகத் தேடி அருமையானதொரு மோட்டார்வண்டியைத் தேர்ந்தெடுத்தேன். அதன் விலை சிறிது அதிகமான போதிலும், பள்ளி செல்லச்சம்மதித்த எனக்குப்பரிசாக, விலையுயர்ந்த அந்த பொம்மையை வாங்கிக்கொடுத்தார்கள் எனது அன்புப் பெற்றோர்கள்.

அதிகாலையிலேயே எழுந்து குளித்துக் கடவுளை வணங்கிப் பள்ளி செல்ல ஆயத்தமானேன். பளபளவென மினுங்கும் புத்தம்புதிய சப்பாத்துக்களை அணிந்து, கையில் புத்தகப்பையையும் எடுத்துக்கொண்டு பள்ளிக்குக்கிளம்பிய என்னைப் பெருமைபொங்கப் பார்த்தார் அம்மா.

கட்டித்தழுவி முத்தமிட்ட அம்மா ''நல்ல சிறுவன் நீயப்பா'' என்று சந்தோஷத்துடன் சொன்னார். தயாராயிருந்த அப்பாவின் சைக்கிளிலே ஏறிக்கொண்டேன். அப்பாவின் சைக்கிள் மெதுவாய் நகர்ந்து பள்ளி நோக்கிய தனது பயணத்தை ஆரம்பித்தது.

சைக்கிள் வண்டி தெருமுனைவரை சென்று திரும்பும்வரை முற்றத்து வாசலிலேயே நின்று கையசைத்தார் அம்மா. அவர் காலருகே நின்றிருந்த குண்டுப்பூனையார் சைக்கிளில் ஏறி விரைந்து செல்லும் என்னை வைத்தகண்வாங்காது பார்த்திருந்தார். புத்தம்புதிய எனது மோட்டார் வண்டியைப்பற்றியும், அருமை நண்பர் குண்டுப்பூனையாரைப்பற்றியும் அப்பாவுடன் பேசிக்கொண்டே பள்ளிக்குச்சென்றேன் நான்.



# ஒரேயொரு மாம்பழம்

குன்றுகளும், குழிகளும் நிறைந்து மோசமாய் சிதைந்து போயிருந்த அந்தப்பாதையின் ஓரமாய் வந்து நின்றது ஒரு மோட்டார்வண்டி. கதவைத்திறந்து கீழிறங்கி நின்று சுற்றுமுற்றும் நோட்டம்விட்டாள் செல்வி. நடந்துமுடிந்த போரினால் சிதைந்துபோயிருந்த நகரம் இப்போது மீண்டும் சிறிதுசிறிதாய் இழந்த தனது உயிரை மறுபடியும் பெற்றுக்கொண்டிருந்தது.

நகரமெங்கும் திருத்த வேலைகள் மும்முரமாய் நடந்திருந்தன. பாதைகள், புதிய திட்டங்களின்படி வடிவமைக்கப்படுகின்றன. மின்சாரக்கம்பங்கள் நாட்டப்படுகின்றன, புதிய மின்மாற்றிகள் பொருத்தப்படுகின்றன. இப்படி இரவு பகலாய் ஓய்வு ஒழிச்சலின்றி வேலைகள் தொடருகின்றன. செல்வி ஒரு உயர்தரப் பொறியியலாளர். முப்பது வயதுகளே நிரம்பிய அந்த இளம்பெண்ணின் மேற்பார்வையில் அந்தப்பகுதிப் பாதைகள் திருத்தும் வேலை நடந்திருந்தது.

தோளில் மாட்டியிருந்த பையிலிருந்த காகிதக்கட்டுக்களை எடுத்து விரித்துப்பார்த்த செல்வி தன்னருகே வந்துநின்ற உதவிப்பொறியியலாளரிடம் அவற்றைக்கொடுத்து ஏதோ சொல்லிவிட்டு பாதையின் ஓரமாய் நின்றிருந்த மரத்தின் நிழலுக்கு வந்து சேர்ந்தாள். மரநிழலில் நின்று அங்குமிங்கும் வேடிக்கை பார்த்திருந்த செல்வியின் கண்களில் பாதையின் எதிர்ப்புறமாய்த்தெரிந்த காட்சியொன்று தப்பாது பட்டது. சிதைந்து உருக்குலைந்த மதிற்சுவர்களும், வளைந்து நெளிந்த இரும்புக்கதவுகளும், அந்த மதிற்சுவர்களின் மத்தியிலே முட்புதர்களும், விஷச்செடிகளும் சூழ்ந்த, கூரையில்லாத அந்தப் பென்னம்பெரிய வீடும் செல்வியின் கண்களைக் கலங்கச்செய்தன.

மெதுவாக நடந்து பாதையைக் கடந்து இரும்புக் கதவினருகே வந்தாள் செல்வி. அந்தக்கதவிலே தொங்கிக் காற்றிலே அடிபட்டு அங்குமிங்குமாய் ஆடிக்கொண்டிருந்த மரப்பலகையை நிமிர்த்தி அதில் படிந்திருந்த தூசியைக் கவனமாகத் துடைத்தாள். சிவப்பு மையால் எழுதப்பட்டிருந்த கடி என்ற வார்த்தையைத்தவிர மீதியெல்லாம் அழிந்து போயிருந்தன.

ஆனால் அந்தப்பலகையில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பதை செல்வி நன்கறிவாள். அந்தப் பெரியவீடும், சிதைந்த மதிற்சுவர்களும், உடைந்து வளைந்திருந்த பிரமாண்டமான இரும்புக்கதவுகளும் இன்று நேற்றல்ல இருபது வருடங்களுக்கு முன்னரே செல்விக்கு மிகவும் அறிமுகமானவை. அந்தப்பலகையில் எழுதப்பட்டிருந்த சிவப்புநிற எழுத்துக்கள் செல்வியின் மனதிலே இனம்தெரியாதொரு நடுக்கத்தை இப்போதும் தோற்றுவித்தன.

பாதையோரமாய் அமைந்திருந்த அந்த மாடிவீடும், அதைச்சூழ்ந்திருந்த உயர்ந்த மதிற்சுவர்களும், வளைவுகொண்ட இரும்புக்கதவுகளும் கம்பீரமாய்க் காட்சியளித்தன. அந்தப்பென்னம்பெரிய வீட்டினைச்சுற்றிப் பரந்து பரவியிருந்த தோட்டமும், தோட்டமெங்கும் நிறைந்திருந்த கனிமரங்களும், மலர்ச்செடிகளும் பார்ப்போர் மனங்களையெல்லாம் கவரச்செய்திடவல்லன.

ஆனால் அவற்றையெல்லாம் அருகே சென்று பார்த்துக்கழித்திடும் வாய்ப்பு சாதாரணமானவர்களுக்கெல்லாம் கிடைத்திடாது. காசில்லாத மனிதர்களுக்கெல்லாம் வரவு சொல்லி அந்த வீட்டின் இரும்புக்கதவுகள் என்றைக்குமே திறந்துகொண்டதில்லை. அந்த வீட்டிலிருந்த கத்திபோன்ற கூரியபற்களைக்கொண்ட மேலைநாட்டு உயர்ஜாதி

நாய்களுக்கும் பட்டுக்கும், சாதாரண பருத்திக்கும் வித்தியாசம் கண்டிடக்கூடிய அற்புத ஆற்றல் நிறைந்திருந்தது.



வீட்டுத்தோட்டத்திலே கிளைபரப்பி உயர்ந்து வளர்ந்திருந்த மாமரமொன்றின் பரந்த கிளைகளில் ஒன்று, உயர்ந்த மதிற்சுவர்களையும் தாண்டிப்பாதை ஓரம்வரை பரவியிருந்தது. அந்தக்கிளையிலே நிறைந்திருந்த பிஞ்சுகளுக்கும் காய்களுக்கும் மத்தியிலே உருண்டு திரண்டதொரு சிவந்த மாம்பழமும் காட்சி கொடுத்தது.

அந்த வழியாகப்பள்ளி சென்று திரும்பிடும் செல்வியின் கண்களில் இரண்டு நாட்களின் முன்னதாகவே அந்த மாம்பழம் பட்டுவிட்டது. கவனிப்பாரற்று, அணில்களுக்கோ, பறவைகளுக்கோ இரையாகப்போகும் அந்தப்பழத்தை பெரிய வீட்டிலிருப்பவர்களிடம் கேட்டால் நிச்சயமாகக் கொடுப்பார்கள் என்று செல்வி நம்பினாள்.

அப்படியான அருமையான மாம்பழத்தைக் காசுகொடுத்து வாங்கிடும் நிலையிலா செல்வியின் குடும்பம் இருக்கிறது. ஆதரவற்ற தாயாரும், செல்வியும் அவளது சின்னஞ்சிறிய தம்பியும் பசியற்றிருந்த நாட்களைவிட பசித்திருந்த நாட்களையே

அதிகமாகப் பார்த்திருக்கிறார்கள். நெசவுச்சாலையில் கிடைக்கும் சொற்பமான வருமானத்தில் பத்துவயதே நிரம்பிய தனது அருமை மகளையும், ஐந்து வயது நிரம்பிய மகனையும் காப்பாற்றிடும் தாயாரிடம் மாம்பழம் வாங்கிக் கொடுத்திடுமாறு கேட்டிட செல்வி ஒன்றும் புத்தியில்லாதவளல்ல. அற்புதமான அறிவையும், அபரிமிதமான அழகையும் கொண்ட அன்பான சிறுமி செல்வி.

சிவந்த மாம்பழத்தை வாங்கிவந்தால் தனது குட்டித்தம்பி எப்படித்துள்ளிக்குதிப்பான் என்பதை மனதில் கற்பனை செய்து பார்க்கும்போதே சிறுமியின் கண்களில் ஆனந்தம் நிறைந்தது. மாம்பழத்தில் ஒரு பங்கை தனது அன்புத்தாயார் இரசித்துச்சாப்பிடுவதையும் பார்த்து மகிழ்ந்திட அவள் மிகவும் விரும்பினாள்.

கருணை நிறைந்த செல்வியின் தாயாரின் கனவுகள் எல்லாம் தனது அருமை மகளும், அன்பு மகனும் நன்றாகப் படித்துப்பெரிய பதவிகளை அடைந்து, இந்த வறுமையை விட்டு நிங்கி மகிழ்வுடன் வாழ்ந்திட வேண்டுமென்பதே!.

இரும்புக்கதவருகே வந்து கம்பிகளின் இடுக்களினூடாகத் தோட்டத்தை நோட்டம் விட்டாள் செல்வி. இரும்புக்கதவிலே "கடிநாய் கவனம்!" என்ற சிவப்பு எழுத்துக்களைத்தன்மேல் தாங்கியதொரு பலகை தொங்கியிருந்தது.

தோட்டத்தின் பச்சைப்புற்தரையிலே போடப்பட்டிருந்த அழகான மேசையொன்றில் விதவிதமான பிஸ்கட்டுக்கள் பீங்கான் தட்டுக்களிலே நிறைந்து வைக்கப்பட்டிருந்தன. மெத்தென்ற பச்சைக்கம்பளம் போன்றதந்தப்புற்தரையிலே அமர்ந்து, மடியிலே வைத்திருந்த தனது அழகான பொம்மையின் தலைமுடியை வாரிச் சிங்காரம் செய்து பார்த்திருந்தாள் சிறுமி ஒருவள்.

அவளுக்கும் ஏறத்தாளச் செல்வியின் வயதுதானிருக்கும்.

நிலநிமிட நேரங்கள், அந்தச்சிறுமி வைத்திருந்த பொம்மையின் அழகிலே மூழ்கியிருந்த செல்வி அதிலிருந்தும் கஷ்டப்பட்டு மீண்டு, தான் எண்ணி வந்திருந்த காரியத்தை நிறைவேற்றும் சந்தர்ப்பத்தையும் எதிர்நோக்கியிருந்தாள்.

பெரியவர்கள் யாரையுமே தோட்டத்தில் காணவில்லை. புல்தரையில் அமர்ந்து விளையாடும் சிறுமியிடம் கேட்டும் பலன் எதுவுமில்லை. சின்னஞ்சிறுமியான அவளால் மாம்பழத்தைப் பறித்துக்கொடுத்திட முடியுமா என்ன? செல்வி எதிர்பார்த்திருந்த தருணமும் வந்து சேர்ந்தது.

தோட்டத்துப் புற்தரையிலே மெல்லமெல்ல அசைந்தாடி நடந்து வந்தார் குண்டுத்தேகம் கொண்டதொரு அம்மையார். மாமரத்தின் கிளைகளிலே தொங்கியிருந்த சிவந்த மாம்பழம் போலவே அவரது கன்னங்களும் வீங்கிச்சிவந்திருந்தன. அவர் தன் கழுத்தில் அணிந்திருந்த தங்க மாலையிலே பட்டுத்தெறித்த மாலைநேரத்துச் சூரியக்கதிர்கள் செல்வியின் கண்களில்பட்டுக் கூசிடச்செய்தன.

சிறிதுநேரம் வியப்புடன் அவரையே பார்த்து நின்ற செல்வி சுயநினைவு வரப்பெற்றவளாய் ''அம்மா அம்மா ஒரு நிமிடம் இங்கே வாருங்களேன்", என்று பணிவுடன் அழைத்தாள். அப்போதுதான் செல்வியைக் கண்டிட்ட குண்டுத்தேகம் கொண்ட அந்த அம்மையார் அப்பாவிச்செல்வியை யாரோ பிச்சைக்காரச்சிறுமி என்று எண்ணித் தன்னருகே வந்து நின்ற காவற்காரரிடம் ஏதோ கட்டளைகளைக் கண்டிப்பு நிறைந்த குரலில் இட்டார்.

இரும்புக்கதவை நோக்கிப்பாய்ந்து ஓடிவந்தார்

காவற்காரர். ''உனக்கு என்ன வேண்டும்?'', என்று கண்டிப்பான குரலில் அதட்டிக்கேட்டார், கடமை உணர்வு மிக்க அந்தக்காவல்காரர், காவற்காரரின் காட்டுக்கத்தல் கேட்டுப் பயந்துபோனாள் செல்வி, எனினும் சமாளித்துக்கொண்டே தான்வந்த நோக்கத்தையும் சொன்னாள்.

அதற்குள் குண்டுத்தேகம் கொண்ட அந்த அம்மையாரும் ஆடி அசைந்து நடந்து அங்கு வந்து சேர்ந்தார். அவர் நெற்றியிலே துலங்கிய திருநீற்றுப்பூச்சும், சந்தனமும் செல்வியின் மனதிலே பெரியதொரு நம்பிக்கையைத் தோற்றுவித்தன.

இந்த அம்மா மிகவும் நல்லவர். அன்பானவர், நிச்சயமாக அந்த மாம்பழத்தை எனக்குக்கொடுப்பார் என்றே நம்பினாள் அந்த அப்பாவிச்சிறுமி. காவற்காரர், மிகவும் பணிவுடன் வளைந்து குண்டுத்தேகம் கொண்ட அம்மையாரிடம் செல்வியின் வேண்டுகோளைச் சொன்னார். அவரது குரலிலே சிறிது நேரத்தின் முன்தொனித்த கடூரமும், கண்டிப்பும் இப்போது காற்றில் கரைந்த கற்பூரம் போன்றதல்லவா மறைந்திருந்தன. காலத்தின் போக்கிலே ஏற்பட்ட உயிரியல் மாற்றங்களால் மனித உடலிலிருந்தும் கடுகி மறைந்துபோய்விட்ட அந்த வால் மட்டும் அவரிடமில்லாதது துரதிஷ்டம்தான். அது இருந்திருந்தால் நன்றி உணர்ச்சியைக் காட்டிடுவதற்கு மிகவும் துணைபுரிந்திருக்குமல்லவா!.

காவற்காரர் சொன்னதைக்கேட்ட குண்டுத்தேகம்கொண்ட அம்மையாரின் கண்கள் பழுக்கக்காய்ச்சிய இரும்புபோல சிவந்தன. ''அடேய் முட்டாளே இந்தப்பிச்சைக்காரியை இங்கிருந்து அடித்துவிரட்டு!'', என்று அடிக்குரலில் கத்தினார். ஆணைகேட்டு ஆவேசம் பொங்கிய நிலையில் விரைந்து வந்து இரும்புக்கதவின் பிரமாண்டமான பூட்டைத்திறக்கத் தொடங்கினார் காவல்காரர்.

அம்மையாரின் காட்டுக்கத்தலும், ஆவேசமாய் தன்னை நோக்கிப்பாய்ந்து வரும் காவற்காரரும், அவர் கைகளிலே காட்சி கொடுத்த அந்த நீண்ட மரக்கட்டையும் செல்வியின் மனதிலே சொல்லிடமுடியாத திகிலைநிறைத்தன. கால்களிலே அணிந்திருந்த பழைய செருப்புக்களில் ஒன்று பட்டென்று அறுந்திட, தோளிலே தொங்கிய துணிப்பையிலிருந்து கீழே விழுந்த பென்சிலையும் எடுத்திட நேரமில்லாது அங்கிருந்து பாய்ந்தோடித் தப்பித்துக்கொண்டாள் செல்வி.

அங்கிருந்து பாய்ந்து ஓடித்தெருமுனைவரை வந்த செல்வி, திரும்பி மீண்டும் அந்த பெரிய வீட்டைப்பார்த்தாள். செல்விக்கு இப்போது சிவந்த மாம்பழத்தின்மேல் ஆசையில்லை. அவளது கவலையெல்லாம் தவறிக்கீழே விழுந்துவிட்ட தனது பென்சிலைப்பற்றித்தான். தரையிலே விழுந்துகிடந்த பென்சிலை வேகமாகக்குனிந்து எடுத்த காவற்காரர் தனது கோபத்தையெல்லாம் அதன்மேல் காட்டித்துண்டு துண்டாக முறித்து எறிந்தார்.



வெகுதூரமாகத் தெருமுனையிலே நின்றிருந்த செல்வியின் கண்களிலே காவற்காரரின் கொடிய செயல் தென்பட்டது. அந்தச்சிறுமியின் பிஞ்சு மனதிலே சொல்ல

முடியாத வேதனையுடன், கூரிய பொருள் ஒன்று ஆழமாய் ஏறிப்பதிந்து கொண்டது.

கண்களில் திரண்ட கண்ணீர் முத்துக்களாய்த்தரையில் சிதறின. ஏமாற்றமும், வெட்கமும், வேதனையும் எவ்வாறான வேறுபட்ட உணர்வுகள் என்பதை அறியாத அந்த சிறுபிராயத்திலே நன்கு அறிந்துகொண்டாள் செல்வி. தெருவிலே நின்று அழுதிடுவதற்கு செல்வி விரும்பவில்லை. பொங்கிவெடித்து வெளிக்கிளம்பத் தயாராயிருந்த அழுகையை உதடுகளில் அழுத்திப்பிடித்துக்கொண்டாள். தலையைக்கவிழ்த்துக் கண்களில் வழிந்த கண்ணீரையும் மறைத்துக்கொண்டு அங்கிருந்து விரைந்து நடந்தாள் அந்த ஏழைச்சிறுமி.

அம்மா இப்போது நிச்சயம் வேலையால் வந்திருப்பார். மனதிலே குமுறிடும் வேதனைகளுக்கெல்லாம் மனிதருக்கும் சரி, விலங்குகளுக்கும் சரி இறுதி வடிகால் தங்கள் தங்களது தாயாரது மடிதானே!.

அழிந்து போயிருந்த சிவந்த எழுத்துக்களைத்தன்மேல் தாங்கிச்சிதைந்து போயிருந்த பலகைமேல் கண்களை நிறுத்திப்பழைய நினைவுகளில் மூழ்கியிருந்த செல்வியின் கவனம் அங்கே கேட்டதொரு குரலினால் கலைந்தது.

குரல்வந்த திக்கிலே திரும்பிப்பார்த்தாள் செல்வி. அங்கே எலும்புக்கூடுபோன்ற மெலிந்த தேகமும், தொங்கிய சதைகளுமாய் ஒரு அம்மையாரும், அவருகே அழுக்கு நிறைந்திருந்த ஆடைகளுடன் செல்வியின் வயதை ஒத்ததொரு பெண்ணும் காட்சிகொடுத்தார்கள்.

எலும்புக்கூட்டுத்தேகம் கொண்ட அம்மையார் நடுங்கும் குரலிலே பேசத்தொடங்கினார். ‘‘அம்மா நீங்கள்

புணர்வாழ்வுத்தறையிலிருந்து தான் வந்திருக்கிறீர்கள் போலும். இது எங்களது வீடுதான். எல்லாம் அழிந்து போயிற்று. இப்போது சாப்பிடுவதற்கே வழியில்லை. எனது மகளும் நானும் பட்டினியால் வாடுகின்றோம்''.

அந்த அம்மையாரின் கண்களிலிருந்து கண்ணீர் அருவியாய்ப்பெருகியது. அவரருகே நின்றிருந்த பெண்ணின் முகமும், அவளது வறண்ட கண்களும் பசியின் கொடுமையை செல்விக்கு நன்கு உணர்த்தின. விரைந்து அங்கிருந்து நடந்து தனது மோட்டார் வண்டிக்குவந்தாள் செல்வி. மோட்டார்வண்டியிலிருந்த பிளாஸ்ரிக் பையொன்றை எடுத்துவந்து அந்தப் பெண்ணிடம் கொடுத்தாள். அதிலே மாம்பழம், வாழைப்பழம், திராட்சை என்று பலவிதமான பழங்கள் நிறைந்திருந்தன.

தனது கைப்பையைத்திறந்து அதிலிருந்த காசையெடுத்து எலும்புக்கூட்டுத்தேகம் கொண்டிருந்த அம்மையாரின் கைகளில் திணித்தவள், அவரை அன்புடன் பார்த்துச்சிரித்துவிட்டுத் தனது மோட்டாரை நோக்கி விரைந்து நடந்தாள்.

அவள் கண்கள் கலங்கியிருந்தன. மதிற்சுவற்றையும், இரும்புக்கதவுகளையும் போன்று நல்லவர்களின் மனம் ஒன்றும் உயிரற்ற பொருளல்லவே காலத்தின் போக்கில் சிக்கி மாறிவிடுவதற்கு!.



JAFFNA SOCIAL ACTION CENTER
159, 4th CROSS STREET
JAFFNA
Tel: 021 222 3699
JSAC

# சிவப்பு நிறச்சிங்காரக்குடை

காக்கை அக்கா சிவப்பு நிறச்சிங்காரக்குடையொன்றை வாங்கினார். புத்தம்புதிய தனது குடையை விரித்துப் பிடித்துக்கொண்டே தாமரைக்குளத்தின் கரையிலே உலாவிக் காற்றுவாங்கிட விரைந்து நடந்தார். வீதியில் சென்றவர்கள் எல்லாரும் காக்கை அக்காவின் குடையின் அழகைப்பார்த்து வியந்து பேசினார்கள். காக்கை அக்காவுக்கோ பெருமை தாங்கமுடியவில்லை. எல்லோருக்கும் நன்கு தெரியுமாறு தனது குடையைக் காட்டிக்கொண்டே உல்லாசமாக நடைபோட்டார்.



சின்னஞ்சிறய சிட்டுக்குருவியார்கள் சிலர் குடையின் அருகே வந்து ஆசையோடு தொட்டுத்தடவிப் பார்த்தார்கள். சிட்டுக்குருவிகள் குடையைத்தொட்டுப் பார்ப்பது கண்ட காக்கை அக்காவோ கடுங்கோபம் கொண்டு அவர்களைக் கொத்திக்கொத்தி விரட்டியடித்தார். பாவம் சிட்டுக்கருவியார்கள் வலியோடு கத்திக்கொண்டே அங்கிருந்து பறந்து ஓட்டம் பிடித்தார்கள். பறந்தோடும் சிட்டுக்குருவியார்களைப்பார்த்து ஏளனமாகச்சிரித்த காக்கை அக்கா உல்லாசமாக நடந்து தாமரைக்குளத்துக்கு வந்து சேர்ந்தார்.

தாமரைக்குளத்தின் கரையிலே அமர்ந்து மீன் பிடித்துக்கொண்டிருந்த பச்சைத்தவளையார் தப்பாது காக்கை அக்காவின் கண்களிலே பட்டுவிட்டார். விரைந்து பச்சைத்தவளையாரின் அருகே சென்று, தனது குடையைக்காட்டி நளினம் புரிந்து நின்றார். காக்கை அக்காவின் குடையைக்கண்ட த்வளையார், அதன் அழகிலே மயங்கினார்.



''காக்கை அக்கா! காக்கை அக்கா, அற்புதமான இந்தக்குடையை எங்கு வாங்கினாய்?'' என்று ஆவலுடன் கேட்டார். அதைக்கேட்ட காக்கை அக்காவுக்கோ அடக்கமுடியாத சிரிப்புப் பிறந்தது. பலமாக சிரித்தவாறே ''தவளைத்தம்பி, தவளைத்தம்பி விலையைச்சொன்னால் மட்டும் இப்படி ஒரு குடையை நீ வாங்கிவிடுவாயோ!'' என்று ஏளனமாகக் கேட்டார்.

காக்கை அக்காவின் பதில், பச்சைத்தவளையாரின் மனதிலே சொல்லமுடியாத அளவு வேதனையை உண்டாக்கியது. எனினும் சமாளித்துக் கொண்டே ''மதிப்புக்குரிய காக்கை அக்கா ஏதாவது தப்பாகக் கேட்டிருந்தால் என்னை மன்னித்துவிடு. அறியாமல் ஆசைமிகக்கொண்டு கேட்டுவிட்டேன்'' என்று சொல்லிவிட்டு

தனது வேலையைத்தொடர்ந்தார். எனினும் காக்கை அக்காவோ தவளையாரைச்சீண்டிப் பார்ப்பதை நிறுத்திவிடவில்லை. ''தவளைத்தம்பி, தவளைத்தம்பி, குடைவாங்கிட முடியாத நீ மழைவந்தால் எப்படிச் சமாளிப்பாய்?''.

முகத்தில் புன்னகை நிறைந்திடப்பதில் சொன்னார் தவளையார். ''காக்கை அக்கா, மழை வந்திட்டால், இந்தத்தாமரைக் குளத்திலே நிறைந்திருக்கும் தாமரை இலைகளில் ஒன்றைப்பிடுங்கிக் குடையாய்ப் பிடித்திடுவேன்''. பச்சைத்தவளையாரின் பதிலைக்கேட்ட காக்கை அக்கா உடல் குலுங்கிட விழுந்து விழுந்து சிரித்தார். ''அற்பமான இந்தத்தாமரை இலைகளையா நீ குடையாக உபயோகிக்கிறாய், அதுசரி உன்னால் என்னைப்போல ஒரு குடையை வாங்கமுடியுமா என்ன!'' என்று ஏளனமாகக் கேட்டுவிட்டு, மேலும் அங்கு நிற்கப்பிடிக்காது தாமரைக் குளத்தின் வேறொரு கரைக்கு விரைந்து நடந்தார்.

விரைந்து செல்லும் காக்கையாரைக் கவலை நிறைந்த முகத்துடன் பார்த்த தவளையார் பெருமூச்சொன்றை விட்டவாறே தனது வேலையைத் தொடர்ந்தார்.

சிறிதுநேரம் கழிந்தது. குளத்தின் கரையிலே தனது சிவப்பு நிறச்சிங்காரக்குடையைப்பிடித்துக்கொண்டு ஒய்யாரமாய் நடைபோட்டு உலாவிக்கொண்டிருந்தார் காக்கை அக்கா. அந்தநேரம் பார்த்து திடீரென்று வானம் இருண்டது. கண்ணைப்பறிக்கும் வெளிச்சம் பாய்ச்சி மின்னல் மின்னியது. காதுகளை செவிடாக்கி இடிஇடித்தது. திரண்ட இருண்ட மேகங்கள் உடைந்து மழையாய்ப்பொழிந்தன. அடைமழையுடன் சேர்ந்து ஆவேசமாய் சுழன்று ஆட்டம் போட்டு வேகமாய் வீசியது பெருங்காற்று.

வீசிய பெருங் காற்றிலே காக்கை அக்காவின் சிவப்பு நிறச்சிங்காரக்குடையின் கம்பிகள் முறுக்குப்போல நொறுங்கிப்போயின. சிவப்பு நிறச்சிங்காரக்குடை காக்கை அக்காவின் கைகளிலிருந்தும் விடுபட்டு அடிக்கும் பெருங்காற்றிலே பஞ்சுபோல எங்கோ பறந்துபோயிற்று. குடையைப்பறிகொடுத்து சோவென்று பொழியும் மழையிலே நனைந்து, வெடவெடவென்று நடுங்கி வாடினார் காக்கை அக்கா.

சுழன்று வீசிய கடுங்காற்று இப்போது ஓய்ந்திருந்தது. சோவென்று பொழிந்த பெருமழையும் தனது ஆவேசம் தணிந்து, அமைதியான தூறல்களாய் மாறியிருந்தது.

புயலும், மழையும் தொடங்கியபோதே குளத்தில் குதித்து, அங்கு பரவிப்படர்ந்திருந்த தாமரை இலைகளின்கீழ் மறைந்திருந்த பச்சைத்தவளையார் மெதுவாகத் தலையைத்தூக்கி வெளியே பார்த்தார். குளத்தின் கரையிலே முழுவதுமாக நனைந்து, வெடவெடவென நடுங்கிநின்ற காக்கை அக்காவைக்கண்டார். அடித்த காற்றிலே குடைமட்டுமல்ல, காக்கை அக்காவின் பட்டுத்தொப்பியும் கூடவே பறந்துபோயிருந்தது.

பச்சைத் தவளையார் விரைந்து, குளத்திலே இருந்ததொரு பெரிய தாமரை இலையைப்பிடுங்கிக்கையிலே எடுத்துக்கொண்டு, தூறலில் நனைந்துகொண்டிருந்த காக்கை அக்காவை நோக்கி விரைந்தோடினார். அன்புடன் அந்தத் தாமரைக்குடையை காக்கை அக்காவிடம் தந்து பிடித்துக் கொள்ளுமாறு சொன்னார். மழைத்தூறலுக்கும், குளிருக்கும் தாமரைஇலைக்குடை மிகவும் இதத்தைக் கொடுத்தது. வெட்கம் பிடுங்கித்தின்ன, பச்சைத்தவளையாரைக் கட்டிக் கொண்ட காக்கை அக்காவின் கண்களில் கண்ணீர் அருவியாகப்பெருகியது.

# அன்பு மனம்

சுற்றிச்சுழன்று வேகமாய் வீசியது புயல்காற்று. காட்டு மரங்களெல்லாம் வீசிய புயலில் மாட்டி பலமாய் அசைந்தாடின. இலைகள் உதிர்ந்து காற்றில் சுற்றிச்சுழன்று பறந்தன. கிளைகள் முறிந்து, கூடுகள் சிதறி உடைந்ததால், பறவைகள் அவலக்குரல் எழுப்பியவாறே வானில் பறந்து, புயற்காற்றில் மாட்டித்தவித்தன.

கருநிறக்காக்கையாரின் கூடும் அடித்த புயலில் மாட்டிச் சிதறிப்போயிற்று. குளிரும், பசியும் கருநிறக்காக்கையாரை வாட்டி எடுத்தன. தங்குவதற்கு இடமில்லாது, கண்களில் கண்ணீர் பெருக, கஷ்டப்பட்டுச்சிறகடித்துப் பறந்தார் காக்கையார்.



பறந்துசென்ற காக்கையாரைப் பார்த்து பல்லிளித்துச் சிரித்தார் சாம்பல்நிறமுயல்குட்டியார். முயல்குட்டியாரைப் பார்த்த காக்கையார் ''முயல்தம்பி, முயல்தம்பி! அடித்திடும் புயலிலே அருமையான எந்தன் கூட்டை இழந்தேன். பசியும் குளிரும் வாட்டி எடுத்திடத்தவிக்கும் எனக்கு உந்தன் வீட்டில் தங்க இடம் கொடுப்பாயா?", என்று அழுதுகொண்டே கேட்டார்.

அதைக்கேட்ட முயலார் சிறிதும் இரக்கமின்றி, ''காக்கையாரே, காக்கையாரே கூட்டை இழந்தது உமது தலைவிதி. எனக்குத்தொல்லை கொடுக்காதீர்'' என்று சொல்லிவிட்டு புதர்களின் மறைவிலிருந்த தனது குழிவீட்டினுள் தாவி ஓடிப்புகுந்து கொண்டார்.



முயலாரின் பதிலைக்கேட்டு மேலும் கவலை கொண்ட காக்கையார் மெதுவாக சிறகடித்துப்பறந்தார். புயற்காற்று இப்போது சிறிது தணிந்திருந்தது. கருநிறக்காக்கையாருக்கு உடலிலோ வலுவில்லை. பசி கண்களை இருளச்செய்தது. உடல் குளிர்ந்து நடுங்கியது. தள்ளாடித்தள்ளாடிப்றந்து வந்த காக்கையார் மரமொன்றின் கிளையிலே அமர்ந்து கொண்டார்.



அந்த மரத்தடியில் ஒருகுள்ளநரியக்கா ஆனந்தமாய் குறட்டைவிட்டுத் தூங்கியிருந்தார். குள்ளநரியக்காவின் அருகே சென்ற கருநிறக்காக்கையார் மெதுவாக அவரைத்தட்டி எழுப்பினார். தூக்கம் கலைந்து எழுந்த குள்ளநரியக்கா எதுவுமே

விளங்கிடாது தூக்கக் கலக்கத்தில் மிரளமிரள விழித்தார். ''குள்ளநரியக்கா, குள்ளநரியக்கா! அடித்திடும் புயலிலே அருமையான எந்தன் கூட்டை இழந்தேன். பசியும் குளிரும் வாட்டி எடுத்திடத்தவிக்கும் எனக்கு உந்தன் வீட்டில் தங்க இடம் கொடுப்பாயா?'' என்று அழுதுகொண்டே கேட்டார்.



அதைக்கேட்ட குள்ளநரியக்கா முகத்தைத்தொங்கப் போட்டுக் கொண்டே பெருமூச்சொன்றை விடுத்தார். கூசாது பெரிதொரு பொய்யும் சொன்னார். ''காக்கையாரே, காக்கையாரே! உம்மைப்போலவே நானும் வீட்டை இழந்து தவிக்கிறேன். தவித்துக்கிடக்கும் என்னிடம் உதவிகேட்டு என்னபலன்! வேறு யாரிடமாவது கேட்டுப்பாரும்'' என்று சொல்லிவிட்டு மரத்தின் வேர்களின் இடுக்கில் அமைந்திருந்த தனது அழகான வீட்டினுள் தாவி ஓடிப்புகுந்து கொண்டார்.

குள்ளநரியக்கா சொன்னது பொய் என்பது கருநிறக் காக்கையாருக்கு அதற்கு மேலும் புரியாதா என்ன? துன்பம் வந்த வேளையில், பிறருக்கு உதவிசெய்ய வசதியிருந்தும், மனமில்லாதவர்களைப்பற்றி எண்ணிப் பார்த்த கருநிறக் காக்கையாருக்கு, அவர்கள் மேல் கோபம் பிறக்கவில்லை. மாறாக இரக்கமே பிறந்தது. ''பாவம் அறியாமையால் செய்கிறார்கள்'' என்று சொல்லிக்கொண்டு அங்கிருந்து பறந்த கருநிறக்காக்கையார், வழியில் நாவல் மரமொன்றைக் கண்டார்.

நாவல்மரத்தடியிலே தரையில், அடித்தபுயலில் உதிர்ந்து விழுந்த நாவற்பழங்கள் பரவிக்கிடந்தன. கனிந்த பழங்களாய்த் தெரிவு செய்து, அவற்றைக் கொத்தித்தின்று பசியாறினார். காக்கையாரின் பசி தணிந்தது. உடல்நடுக்கமும் அகன்றது. உடலிலே புதிய வலிமை பிறந்தது.

தனது பசியைத்தீர்த்த அந்த நாவல்மரத்தின் கிளையொன்றிலே புதிதாக வீடொன்றைக்கட்டிடவும் திட்டம்போட்டார். புயற்காற்று தணிந்து, காடு அமைதியாயிருந்தது. கூடுகளை இழந்த பறவைகள் எல்லாம் பரபரப்பாக அங்குமிங்குமாகப் பறந்து குச்சிகளைச்சேகரித்துப் புதிய கூடுகளை அமைத்திடும் வேலையில் மூழ்கியிருந்தன.

அவர்களுக்கெல்லாம், நாவல்மரத்தடியில் பரவிக்கிடந்த இனிமையான நாவற்பழங்களை எடுத்துக்கொடுத்து பசியாறச்செய்தார் கருநிறக்காக்கையார். காக்கையாருக்கு நன்றி மிகச்சொல்லி, அருமையான நாவற்பழங்களைச் சாப்பிட்டுப் பசியாறித் தங்கள் வேலைகளைத்தொடர்ந்தார்கள் பறவையார்கள்.



காட்டின் பல பகுதிகளிலும் தேடி சில பலகைத் துண்டுகளை நாவல்மரத்தடிக்குக் கொண்டுவந்து சேர்த்தார்

கருநிறக்காக்கையார். அந்தப்பலகைத்துண்டுகளை இணைத்து, அழகானதொரு வீட்டையும் அமைத்துக் கொண்டார். பலகைகளால் அமைக்கப்பட்ட காக்கையாரது வீடு உறுதிமிக்கதாய் விளங்கியது.

மாதங்கள் சில கழிந்தன. அன்றொருநாள் அடித்த பெருமழையிலே காட்டாறு நிரம்பிக்கரைகடந்து காட்டுக்குள்ளே புகுந்து ஓடி வெள்ளமாய் மாறியது. வெள்ளத்திலே மூழ்கி, சாம்பல்நிற முயலாரதும், குள்ளநரியக்காவினதும் வீடுகள் இருந்த இடம்தெரியாது அழிந்துபோயின.



வீட்டை இழந்து பெருகி ஓடும் வெள்ளத்திலே நனைந்து நடுங்கி வாடிய சாம்பல்நிற முயலாருடன் குள்ளநரியக்காவும் வந்து சேர்ந்து கொண்டார். பசியும், குளிரும் வாட்டி எடுத்திட

சோர்வுடன் நடந்த சாம்பல்நிறமுயலாரும், குள்ளநரியக்காவும் நாவல்மரத்தடிக்கு வந்து சேர்ந்தார்கள்.

மரத்தின் கிளையிலே அழகாய் அமைந்திருந்த கருநிறக் காக்கையாரின் வீட்டையும் கண்டார்கள். ''வீட்டுக்காரரே, பெருக்கெடுத்த வெள்ளத்திலே அருமையான எங்கள் வீடுகளை இழந்தோம். பசியும் குளிரும் வாட்டி எடுத்திடத் தவிக்கும் எங்களுக்கு சாப்பிட ஏதாவது தருவீரா?''.

வந்த விருந்தினருக்காகச் சூடான பணியாரம் சுட்டுக்கொண்டிருந்த கருநிறக்காக்கையார், யன்னல் வழியாக வெளியே எட்டிப்பார்த்தார். காக்கையாரைக்கண்ட சாம்பல்நிற முயலாரும், குள்ளநரியக்காவும் வெட்கம் மிகக்கொண்டு தலையைத்தொங்கப்போட்டுக்கொண்டார்கள்.


வந்தவர்கள் யாரென்பதை அடையாளம் கண்டு கொண்டபோதிலும், கருணையுள்ளம் கொண்ட கருநிறக்காக்கையார் அதை வெளியே காட்டிக்கொள்ளாது, விருந்தினருக்காகச்சுட்ட பணியாரத்தில் பாதியைத்தட்டிலே வைத்து சாம்பல்நிற முயலாரையும், குள்ளநரியக்காவையும் சாப்பிடச்சொல்லி உபசரித்தார்.

துன்பம் என்ற வந்தபோதிலும் தாங்கள் உதவி செய்யாததையும் கருத்தில் கொள்ளாது, இப்போது பசியாறப்பணியாரம் தந்த கருநிறக்காக்கையாரின் கருணையைப்பார்த்து வெட்கி நின்ற சாம்பல்நிற முயலாரும், குள்ளநரியக்காவும், மன்னிப்புக் கேட்டு அழுதார்கள். அவர்களுக்கு ஆறுதல்சொல்லி மேலும் பணியாரங்களை உண்ணக்கொடுத்து, அன்புடன் உபசரித்தார் காக்கையார்.

## யோ. சத்யனின் நூல்கள்

1. ஆயிரம் கொக்குகள் (தமிழ்நாடு திருப்பூர் தமிழ்ச்சங்க குழந்தை இலக்கியப் பரிசு பெற்ற நூல்)
2. அமுதனின் உலகம்
3. தங்கப் புதையல்
4. சிவப்பு விமானம்
5. தங்கமுடிப்பூனையார்

JAFFNA SOCIAL ACTION CENTRE
159, 4th, CROSS STREET
JAFFNA
Tel: 021 222 3699
JSAC



# ஆசிரியரை வாழ்த்துகிறார்..

Не только врач, но и
литератор и переводчик.
Это - прекрасно!
Желаю успехов

11.07.

மருத்துவன் மட்டுமல்ல; இலக்கியவாதி, மொழிபெயர்ப்பாளன். இது அற்புதமானது! சத்யனின் முயற்சிகள் முழுமையடைய எனது வாழ்த்துக்கள்.

மருத்துவ பீடத் தலைவர்
போராசிரியர். வி.அ. ஃபுரோலொவ்